ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0
6-மாத சந்தா ,, — ,, 1—12
வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி-ஹு பங்குனி-மீ 15-உ (27—3—1932) | மலர் 48

பலமுள்ளவீரபுருடனுக

குமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 21-நாளைக்கு ரூ. 10.

மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது

கொர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கொர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கொர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

பட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

உலகப்பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பலநோய்களைக் குணம்செய்யும். வெட்டைச்சூடு, திரேககாங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும். 24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்புவலி, நரம்பு தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் எரகரப்பு, சூலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள் காலரோகிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பலகாரணங்கள் இருந்தாலும் மலசிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலசிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்விதமலசிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5.
மாதிரிபிரதி இனம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

மஞ்சள் ஆவாரம்பூ பானத்தூள்

ALWAYSDRINK YELLOW AVARAMBU HEALTH BEVERAGE.

உ. காய்பிக்குப்பதிலாக சாப்பிடவும்.

ஆரோக்கியத்தையும் தீர்க்காயுளையும் தரும்.

C V பாண்டியா & கோ,
16-17 சகின் உலன் பீச்சு, மதராஸ்.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்

குஷ்டம் தீராதகர்மரோயென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

எக்காரணத்தினாலுமுண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும் சரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சரத்தீதாதுக்கினங்கி அனுபவித்தானந்தப்படுங்கள்.
நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

சி. ஓ. கேசவவைத்தியர்

Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S. I.

Read.
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாகிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை பத்தாயிரம் பிரதியாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விரும்பும் சுயமரியாதை அன்பர்கள் மூன் டணமனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது.
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"போர் முரசு"

வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணா.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, சுவைகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

ராமாயணமும் பாரதமும் 'நரியும் காக்கையும்' போன்ற கட்டுக்கதைகளே.

Dr. M. NAGANATHAN, M.A., Ph.D.,
READER,
Department of Economics,
University of Madras,
MADRAS-600 005.

பெரியோர்களே!

தயவு செய்து இதை வாசியுங்கள்

குடி அரசு

எங்கள் "கெய்ரோடைடன்" டானிக்கைப்பற்றி "குடி அரசு" பத்திரிகையில் விளம்பரம் செய்துவந்தோம். பல பெரியோர்கள் நற்சாட்சிகள் இருந்தால் வெளியிடும்படி எழுதினார்கள். இப்பொழுது கெய்ரோடைடன் மருந்தைப்பற்றி **18 நாளைக்குள் வந்த நற்சாட்சிகளை** இந்த வாரம் 'குடி அரசு பத்திரிகையில் எத்தனை பக்கம் விளம்பரத்திற்கு இடமிருக்கிறதோ அத்தனை பக்கங்களிலும் வெளியிட்டிருக்கிறோம். தயவு செய்து எல்லா நற்சாட்சிகளையும் வாசித்துப் பாருங்கள். ஒரு மருந்தைப்பற்றி 18 நாளைக்குள் இத்தனை நற்சாட்சிகள் வந்திருந்தால் 22 ஆண்டுகளாக எல்லா மருந்துகளையும்பற்றி எத்தனை ஆயிரம் நற்சாட்சிகள் வந்திருக்கும் என்பதைப்பெரியோர்கள் கவனித்து எங்கள் கம்பெனியின் பெருமையை அறிந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தமிழ் உலகத்தில் எங்கள் மருந்துகள் முதன்மை பெற்று விட்டன. தமிழ் உலகிலுள்ள எல்லா சுதேச மருந்துகம்பெனிகளையும்விட எங்கள் கம்பெனியில்தான் அதிக ஆயிரக்கணக்கான புட்டிகள் மாதந்தோறும் விலையாகின்றன. ஆயிரக்கணக்கான ஏஜண்டுகளும் வைத்தியர்களும் மறுபடியும் மறுபடியும் வாங்குகிறார்கள். தாங்களும் ஒரு முறை வாங்கி உண்மையைத் தங்கள் நண்பர்களுக்கும் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆர் எஸ். பதி அண்கோ, மதுரை.

கெய்ரோடைடன் ஒரு மருந்தைப்பற்றி
18 நாளைக்குள் வந்த நற்சாட்சிகளும் கடிதங்களும்.

கெய்ரோடைடன் பெருமையை என்னால் சொல்ல முடியாது.

கும்பகோணம்.

எனக்குப் பசியில்லாமல் ஆகாரம் செல்லாமல் உடம்பு நிரம்பவும் மெலிந்துவிட்டது. வாயில் புண் உண்டாகி காரமான ஆகாரம் சாப்பிட முடியாமலும், சாப்பிட்ட ஆகாரம் ஜீரணமில்லாமலும் நிரம்பவும் கஷ்டமாக இருந்தது. டாக்டர்களிடத்திலும், வைத்தியம் பார்த்தும் சவுகரியப்படவில்லை. பிறகு தங்களுடைய கெய்ரோடைடன் மருந்து பாட்டில் வாங்கிச் சாப்பிட்டபிறகு எனக்கு வாய்ப்புண் ஆறிவிட்டது. நல்ல பசி உண்டாகி ஆகாரம் செல்லுகிறது. உடம்பு கொஞ்சம் சவுகரியமாயிருக்கிறது. ஆகையால் தங்களுடைய மருந்து நல்லதாயும் வியாதியைக்கண்டிக்கத் தக்கதாயுமிருக்கிறதில் சந்தேகமில்லை. கெய்ரோடைடன் மருந்தின் பெருமையை என்னால் சொல்ல முடியாது. அது நிரம்பவும் மேன்மை பொருந்தியது.

(Sd) S. K. கோவிந்தஸாமி பிள்ளை,

20-12-31. ஜவுளி வியாபாரம், எடத்தெரு, கும்பகோணம்.

புதிய வாலிப வாழ்க்கையைத் தருகிறது. முதல் நம்பர் டானிக் என்கிற உண்மையை ஒருவர் மறுக்கமுடியாது.

சமயபுரம். (கண்ணனூர்)

இங்கிலீஷ் கடிதத்தின் மொழிபெயர்ப்பு.

ஐயா, தங்களுடைய கெய்ரோடைன் மருந்தை முறைப்படி சாப்பிட்ட பிறகு அது ஒரு முதல்தரமான டானிக் (பஸ்ட் கிளாஸ் டானிக்) என்கிற உண்மையை ஒருவர் மறுக்கமுடியாது. அது ஒரு மனிதனுடைய எல்லாவித நோய்களையும் குணப்படுத்துவது மாத்திரமல்லாமல் அது அவனுக்கு ஒரு புதிய வாலிப வாழ்க்கையையும் தருகிறது.

15—2—31 (Sd) டி. எம். பொன்ராம், ஹெட்மாஸ்டர்,
போர்டு ஹைய்யர் எலிமெண்டரி ஸ்கூல், சமயபுரம், கண்ணனூர்.

இரத்தசுத்தி இல்லாமலிருந்தது பூரணசுகமாய் விட்டது.

சேலம்—மகுடநல் சத்திரம்.

ஐயா, நான் சில நாளைக்குமுன் தங்களுடைய கம்பெனியில் கெய்ரோடைன் மருந்து 80 வேளைக்கு வாங்கிச் சாப்பிட்டதில் என்னுடைய தேகம் இரத்தசுத்தி இல்லாமல் இருந்த தேகம் தங்களுடைய கெய்ரோடைன் மருந்தைச் சாப்பிட்டு பூரணமான சுகமாய் இருக்கிறேன்.

11—2—31. (Sd) பொன்னுச்சாமிக் கவுண்டர்,
(சின்னகுட்டிக் கவுண்டரவர்கள் குமாரர்)
ஆட்டையாம்பட்டி P. O. மகுடநல்சத்திரம். சேலம் ஜில்லா.

கேட்லாக்கில் சொல்லிய பிரகாரம் இந்த டானிக் கைகண்ட மருந்து.

விழுப்புரம்.

நான் தங்களுடைய (கெய்ரோடைன்) டானிக்கில் அரைப்புட்டி சாப்பிட்டு இருக்கின்றேன். அரைப்புட்டி சாப்பிட்டபோதிலும் தங்களுடைய கியாட்லாக்கிற் சொல்லிய பிரகாரம் இந்த டானிக் அந்தவியாதிகளை நீக்கும்படியான கைக்கண்டமருந்து என்று என்னால் கூடியவரையில் ருசுப்படுத்துவேன்.

(Sd) R. N. க. டி. காபிரியேல் பிள்ளை,
14—2—31. குட்செட்லயன், விழுப்புரம்.

கெய்ரோடைன் மருந்து சஞ்சீவியைப்போல்
அபார சக்திவாய்ந்தது.

மதராஸ்.

உங்களுடைய (கெய்ரோடைன்) மருந்தை ஒரு புட்டி வரவழைத்து நாற்பதுநாள் சாப்பிட்டேன். அதன்பிறகு எனக்கு இருந்த வெட்டைச் சூடு, காது இறைச்சல், மலபந்தம் இதுகளெல்லாம் நீங்கித் தற்சமயம் நிரம்ப ஆரோக்கியத்தோடிருக்கிறேன். ஆகையினால் தங்களுடைய கெய்ரோடைன் மருந்து.....சஞ்சீவியைப்போல் அபாரசக்தியை வாய்ந்ததென்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி வேண்டுமா? இன்னும் 2 புட்டி வாங்கி என் உறவினர்களுக்குக் கொடுக்கலாமென்று இருக்கிறேன்.

(Sd) கெ. மாணிக்கம் செட்டியார்,
13—2—31. போஸ்டுமேன், மவுண்ட்ரோட், மதராஸ்.

இந்திரிய உடைச்சல் குணமாய்நிரம்பவும் சௌக்கியமாயிருக்கிறேன்.

சேலம்—ராசிபுரம்.

எனக்கு இரண்டு வருஷகாலமாய் இந்திரியம் உடசலினால்கை கால் அசதியும் கொஞ்ச தூரங்கூட நடக்கச்சக்தி யில்லாமலும் இருந்ததுமன்றி ஜீரணசக்தியில்லாமல் இரண்டு நாளைக்கு ஒருதடவைமல வாதைக்குப் போய்க்கொண்டிருந்தேன். தங்களுடைய கெய்ரோடைன்மருந்தைச்சாப்பிட்டபிறகு என்னுடைய தேகம் நிரம்பவும் சௌக்கியமாயிருக்கிறேன். தங்களுக்கு நிரம்பவும் நன்றியுள்ளவனாய் என் வந்தனத்தைச்செலுத்துகிறேன்.

10-2-31 (Sd) T. கோவிந்தசாமி, ஜவுளிவியாபாரம்,
இராசிபுரம், சேலம்ஜில்லா.

வியாதிகள் யாவும் பாறுவைக்கண்ட பனிபோல் பறந்துவிட்டன.

திருச்சிறுப்பள்ளி, பொன்மலை.

நான் தங்களிடத்தில் வாங்கிச் சாப்பிட்ட கெய்ரோடைன் டானிக் மருந்தினால் என்னுடைய உடம்பிலிருந்த வியாதிகள் யாவும் பாறுவைக்கண்ட பனிபோல் எல்லாம் பறந்துபோய்விட்டன. நான் இப்பொழுது சௌகரியமாய் சரியான ஆகாரங்களைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறேன். என்னுடைய சினேகிதர்களுக்கும் இது மாதிரியான வியாதி வந்தால் இந்த டானிக்கையே வாங்கி உபயோகப்படுத்தும்படியாகச் சொல்லியிருக்கிறேன்.

(Sd) வி. ஜி. பக்கிரிசாமி,
17—2—31 பவுண்டரி ஷாப், பொன்மலை, திருச்சி.

இரத்தோட்டமும், தேகபுஷ்டியும் உடம்பில் ஏற்பட்டிருக்கிறது.

கைகண்ட ஔஷதம்.

பாளையங்கோட்டை.

தங்கள் கேட்லாக்கில் கண்டிருந்த கெய்ரோடைன் மருந்து ஒரு புட்டி வாங்கி குடும்பத்தில் சாப்பிட்ட அனுபோகத்தில் இரத்த ஓட்டமும், தேகபுஷ்டியும் உடம்பில் ஏற்பட்டிருக்கிறது. பலவிதமான சீக்குகளையும் வேரோடு நீக்குவதற்கு இது ஓர் கைகண்ட ஔஷத மென்று நம்பியிருக்கிறேன்.

இத்துடன் தங்கள் மதனராஜலேகியம் நான் சாப்பிட்டு அனுபோக தாதுபுஷ்டிக்கு இதற்கு நிகரற்ற ஒரே தடவையில் பரிகூச பார்த்த இத்தன்மை லேகியம் போல் நான் இதுவரையிலும் பார்த்ததில்லை.

(Sd) சுடலைமுத்துப்பிள்ளை சுவீகார புத்திரர்,
17—2—31, ஊ. சு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
பெருமாள் கோவில் மேலரதவீதி, பாளையங்கோட்டை.

தங்களுடைய மருந்தைநிரம்பவும் பாராட்டுகிறேன்.

கொழும்பு—(சிலோன்.)

குடியரசு பத்திரிகையில் தங்கள் ஆறுமுக முத்திரையுள்ளகெய்ரோடைனைப்பற்றி நிரம்பவும் சிறப்பாகப் பிரசுரம் செய்திருந்தது. அதைக்கண்டதும் உடனே லெட்டர் எழுதி என்பதுவேளை மருந்து வரவழைத்துப்பக்குவத்தோடு சாப்பிட்டதில் எனக்கு பித்தம், மயக்கம், புளித்தேப்பம், நெஞ்சுவலி இவையெல்லாம் தீர்ந்ததைப்பற்றித் தங்களுடைய மருந்தை நிரம்பவும் பாராட்டுகிறேன். இனியும் என்போலுள்ள பிணியாளிகளைப் பிணியென்ற பதத்தை அகற்றிவைக்கும்என்று நம்புகிறேன்.

(Sd) K. N. சுப்பையா, 42-நிர் குருக்குத்தெரு,
12-2-31 பெட்டா, கொழும்பு.

கடுப்பு, வெள்ளை, இந்திரிய நஷ்டம் குணமாயிற்று எனறுநிரம்பவும் சந்தோஷப்பட்டார்கள்.

வேலூர்.

நான்தங்களிடம் கொஞ்சநாளைக்கு முன்பு (கெய்ரோடைன்) எண்பது வேளைக்கு ஆகக்கூடிய டப்பியொன்று தருவித்திருந்தேன். அதை இவ்விடம் எனதுநண்பர்களுக்கு உபயோகப்படுத்தினேன். அதனால் வெட்டைசம்பந்தமான எரிச்சல், கடுப்பு, வெள்ளை, இந்திரியநஷ்டம், மார்புநோய் இவைகள் குணமாயிற்றென்று நிரம்பவும் சந்தோஷப்பட்டார்கள். இந்தலெட்டர் கண்டதும் முன்போல்ஒரு டப்பிமருந்து வி. பி. மூலமாய் அனுப்பவேணுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

18-2-31. (Sd) V. S. குமாரசாமிநாட்டார்,
நேட்டிவ்டாக்டர், தமிழ்வைத்தியம், சைதாபேட்டை, வேலூர்.

கெய்ரோடைனை நிரம்பவும் மெச்சிக்கொண்டோம்.

திருச்சிறுப்பள்ளி.

கெங்கை கொண்டான்புறம்.

எனக்குக்கணுக்காலின் முட்டில் காயமாக வெகுநாளாய் சீழ் வடிந்து கொண்டும், விஷநீர் வடிந்துகொண்டும் நிரம்பவும் உபத்திர

(இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

கூட்டுப்பொதுக் கடவுளை விரும்புங்கள்.

[கைவல்யம்]

கூட்டென்றால் சேர்க்கை என்று பொருள். இதில்பல விஷயத்தைச் சேர்த்துத் தொடர்ச்சியாய் எழுத உத்தேசித்திருப்பதால் இந்த வியாசத்திற்குக்கூட்டென்னும் பெயர் கொடுக்கப்பட்டது

கறிக்கூட்டிற்கும் கூட்டென்று பெயருண்டு. கலம்பகம், கதம்பம் என்கிற கூட்டுகளுமுண்டு. கதம்பக் கூட்டு வாடவாட வாசனைபோய் விடும். நாளாக நாளாக நறுமணம் கலிந்துவிடும். கலம்பகக்கூட்டு வென்பா கலித்துறை இன்பத்துடன் தீர்ந்துவிடும். குடிஅரசுக்கூட்டு அப்படியல்ல. கடலைப்பருப்பில் புடலங்காய் சேர்ந்தால், நேந்திரங்காயில் சேனைக்கிழங்கும் தேங்காயும் சேர்ந்தால், பாசிப்பருப்பில் பச்சரிசியும், பாலும் சர்க்கரையும் சேர்ந்தால், கோழிமுட்டையில் குருமிளகும் உப்பும் சேர்ந்தால், பாலில் முட்டைசேர்ந்தால், பாயாசத்தில் தேங்காய் பால் சேர்ந்தால், மைசூர் எள்ளில் கோயமுத்தூர் வெல்லம் சேர்ந்தால், வாய்க்கு உருஜியம் தேகதத்திற்கு வலிவும் வருவது எப்படியோ அப்படியும், சம்பா அரிசிச்சோற்றிற்குச்சாம்பாரும், கார்அரிசிவகைச்சோற்றிற்கு கருவாடு கத்திரிக்காய்க்குழம்பும், நெய்சோற்றிற்கு குருமாவும், கம்புச் சோற்றிற்கு தட்டைக்கொட்டைக் குழம்பும், ராகிக்களிக்கு மொசசப் பருப்பு குழம்பும், புளியோதரைக் குத்தேங்காய்ச்சட்டினியும், பொங்கலுக்கு கொச்சியும் பச்சியும், கூட்டிலில் நாக்குக்குச்சுவை ஒத்து, நல்லுணவாகி, உடம்பும் சுவீகரித்து மனதிற்குத்திருப்தியைக்கொடுப்பது எப்படியோ, அப்படியே குடி அரசின் கூட்டு உங்கள் மனதில் பட்டால் மனம் புத்தியில் கலந்து, உடனே விவேகமெனும் பிள்ளையைப்பெற்று விடுகின்றன. அப்பொழுது உண்மை, உண்மையல்லாதது, நல்லது கெட்டது, லாப நஷ்டம், அவசியம், அவசியமல்லாதது, பொய், ஏமாற்று முதலியவைகளை ஆலோசித்துப்பார்க்கும் விவேகமென்னும் பிள்ளைக்கு அறிவென்னும் உபாத்தியாயர் அங்கு உதயமாகிவிடுகின்றனர். விவேகமும் அறிவும் கூடிக்கொண்ட அப்பொழுது தெய்வமென்றும், தேவனென்றும், சாதியென்றும், சமயமென்றும், சாத்திரமென்றும், வழிபாடென்றும், தக்ஷணை என்றும் சொல்லி ஏமாற்றி எங்கள் வயிரை நிறப்புவதுதான் புண்ணியமென்று சொல்லும் பார்ப்பார்களின் சமய வாழ்க்கையின் புறட்டுகளெல்லாம் உங்களுக்குத்தெரிந்துவிடும். அதைத்தான் சுயமரியாதை இயக்கத்தில் பகுத்தறிவென்றுசொல்லப்படுகிறது. அந்தப் பகுத்தறிவு உண்டாகுமிடத்தில்தான் பிரகத்தினின்றும் மனிதன் வேறுபடுகிறான். அந்த பகுத்தறிவைத்தான் சிந்தனை சக்தியென்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். யோகியோகமென்றும், ஞானிஞானமென்றும், கர்மிகடமை யென்றும், தீரன் முயற்சியென்றும், சமயவாதி கடவுளென்றும், சக்திவாதி சக்தியென்றும், காலவாதி காலமென்றும், உலகவாதி உலகமென்றும், சொல்லுவதெல்லாம் அந்தப்பகுத்தறிவைப்பற்றியதேயாகும்.

இந்து சமயத்தெய்வங்களுக்கெல்லாம் பூசை நைவேத்தியம் பார்ப்பாருக்குச்சோறு உண்டு. உயர்ந்த தத்துவத்தை உபதேசிக்கவந்த வேதாந்தத்திற்குக்கூட பாதகாணிக்கையும் பார்ப்பாரச்சோறும், தக்ஷணையும் கொடுத்தால்தான் மோக்ஷமுண்டு. சுயமரியாதை இயக்கக்கடவுளுக்கு என்ன நிவி நைவேத்தியம், ஒங்குமதி தூப தீபம் என்று தாய்மானவர் சொன்ன படி விவேகமே அபிஷேகம் விசாரணையே பூசை.

இந்து சமயத்தில் ஞானமே மோக்ஷம், ஞானம் விசாரணையால் வருமேயல்லாமல் பூசை மந்திரம் வழிபாடு பார்ப்பார போஜனம் இவைகளால் வராது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கம்பராமாயணத்தில் கம்பர் இராமனைத் தெய்வமாகச்சொன்னார், அந்தராமரே வசிட்டரிடம் தெய்வம் எது என்று கேட்டார் அதற்கு வசிட்டர் தெய்வமென்பது கேவலமே அறியல்ல, அறநல்ல, பூதஉடல் கிடைத்ததல்ல, செய்யப்படாத உணர்வான அறிவே தெய்வமென்று உபதேசித்தார். சீரங்கத்து அய்யங்கார்களின் உபத்திரவம் கம்பருக்கிருந்ததுபோல வால்மீகிக்கும் வசிட்டருக்குமில்லை. வேதாந்த குருவென்று இப்பொழுது யாத்திரை செய்யும் சங்கராச்சாரிகள் ஒரு தெலுங்குப்பார்ப்பாரப்பண்டிதன் செய்ததேவிபாகவதத்தைப் பிரமாணம் காட்டி பக்தகோடிகளுக்கு உபதேசிக்கையில் ராமருக்கு வசிட்டர் உபதேசித்த ஞானவாசிட்டம் பிரமாணமாகாதா?

விஷய விசாரணையை உள்ளபடியே செய்வதற்கு பழய ஏட்டைத்தள்ளிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. சுயமான அனுபவமே சிறந்த பிரமாணமாகவிருக்க சுய அனுபவத்தில் விளங்கிக்கொண்டிருக்கும் உண்மைகளுக்கெல்லாம் பழய நூல்களின் ஆதாரங்களும் அவசியமில்லை. நமது துக்கங்களுக்கெல்லாம் காரணம் இயற்கையமைப்பைத்திருப்பி வைத்த ஏற்பாடுகளும் அதற்கு ஜீவனையே அடிமையாக அமைத்துக்கொண்டதும்தான் என்பதை அறிவாளிகள் மறுப்பதில்லை.

நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிரகிருதியின் உபயோகங்களையெல்லாம் கிறிஸ்துவ வேதங்களின் மத சம்பந்தநூல் ஆதாரங்களைக்காட்டியா கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளை நாமும் நமது ஆசாரி பூசாரிகளும் கோவில்களும், தெய்வங்களும் அனுபவித்துத்தானே வருகின்றன. அதை அனுபவிப்பதற்கு இந்து சமய சாஸ்திரங்களில் ஆதாரம் தேடினோமா? அறிவும் அனுபோகமும் அவசியமும் தானே பிரமாணமாக விருக்கிறது.

சுயமரியாதை இயக்கத்தார்கள் கடவுள் இல்லையென்று சொல்லுகிறார்கள் என்று சாதாரணமாகச்சொல்லுகிறார்களேயல்லாமல் கடவுள் என்றால் என்ன? எப்படியிருக்க வேண்டும், எப்படியிருந்தால் கடவுள், இவர்கள் உண்டு என்று சொல்லும் கடவுள் எது? எந்தக் கடவுளை சுயமரியாதைச் சங்கம் இல்லை என்கிறது என்பதை ஆலோசித்துப்பார்ப்பதில்லை.

கடவுள் பொதுவானவர், நியாயவான், கருணைநிதி, என்று சொல்லுகிறார்கள் அப்பேர்பட்டக்கடவுளிருப்பதில் யாருக்குத்தான் ஆக்ஷேபணை? ஆனால் அந்த கடவுளின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதிக்கும்படிச் செய்து விட்டதற்குக் காரணமாகக்காட்டும் கடவுள் இருக்க நியாயமுண்டா என்பதே சுயமரியாதை இயக்கத்தின் கேள்வி?

கடவுள் சமத்துவமானவர் எல்லாவற்றிற்கும் சாக்ஷியாய் விளங்குகிறார் என்று சொல்லுவதில் யாருக்கும் ஆக்ஷேபணையிருக்காது. அந்தக்கடவுள் முகத்திலிருந்து ஒருவனை உண்டுபண்ணி இன்னொருவனைப் பாதத்திலிருந்துண்டுபண்ணி, வேதத்தைச் செய்து அதை முகத்திலிருந்து வந்தவனிடம் கொடித்து, அவனே தன் பந்துவென்றும், அவனே தான் போற்றும்தேவனென்றும்அவனுக்குத்தாழ்ந்த அடிமையென்றும் சொல்லி, பாதத்திலிருந்து வந்தவன் பாடெல்லாம் முகத்திலிருந்து வந்தவனுக்குக் கொடுத்தால்தான் முத்திகொடுப்பேன் என்று சொல்லுவதாகச் சொல்லப்படும் கடவுள் ஆக்ஷேபணைக் குறியதா அல்லவா? அப்படி ஒரு கடவுளுமில்லை. இருக்கவுமாட்டாது. கடவுள் என்னும் பெயருக்கே அது விரோதம் என்னும் காரணங்களினால் நான் அந்தக்கடவுளை சுயமரியாதை இயக்கத்தார் இல்லை என்கிறார்கள்.

ஏதேனும் ஒரு ஜாதியாருக்குப்பெரிய அனுபூதி உண்டாயின் அது பிறருக்கும் கொடுக்கத்தக்கது என்னும் உத்தம குணதத்திற்கு விரோதமாக இருக்கும் கடவுளின் மஹிமைபாவம் விசேடப்பட்டதாமோ? கடவுள் முகத்திலிருந்து வந்தவனே கடவுள் சொன்ன வேதத்தைப்படிக்க உரியவன் மற்றவன் படித்தால் கொடுமையான தெண்டனை என்றும், முகத்திலிருந்து வந்தவன் மற்றவனுக்குச் சொல்லிக்கொடுத்தாலும் பாதத்திலிருந்து வந்தவன் படித்தாலும் கேட்டாலும் கடவுள் தண்டிப்பார் என்றும் சொல்லி மற்றவர்களின் அறிவைத்தடைப்படுத்தின கடவுளின் ஆக்ஞை ஆங்கிலேய அரசாக்ஷியில் அமுங்கி அழிந்து போனாலும் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் பள்ளியில் கடவுள் சொன்ன வேதத்தது வப் பகுதியின் வகுப்பில் பார்ப்பான் தவிர சிவ பெருமானுக்குள் புகுந்து கொண்டிருக்கும்சைவர்களையும், விஷ்ணு பெருமானை மேலே போட்டு மூடிக்கொண்டிருக்கும் வைணவர்களையும் கூட சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. இதற்குக் காரணமாக நிற்கும் கடவுள் நியாயத்திற்கோ, நீதிக்கோ ஒத்ததா? அப்படியும் ஒரு கடவுளிருப்பாரா? அப்படிச் சொன்ன ஒரு கடவுள் இல்லை என்று சொல்லுவது நியாயமல்லவா?

நியாயமில்லாத கடவுளை விட்டு நியாயமுடைய கடவுளை நம்புவதுதானே என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் கடவுள் பொது நியாயமுடையவர் என்று சொல்லுகிறார்களேயல்லாமல், நியாயமுடைய கடவுளை சொல்லிக்கொடுப்பவர்களும் உபதேசிக்கிறவர்களும் நமது ஆசாரி பூசாரி பண்டிதனிலுமில்லையே. அவர்கள் படித்த எடுகளுக்கும் அப்பாலுள்ள எடுகளிலுள்ளதாகச் சொல்லி நியாயமில்லாத கடவுளை அவர்களும் கட்டியழுது மற்றவர்களையும் கட்டி அழச் செய்து கொண்டே வருகிறார்கள். சொல்லிக்கொடுக்க பணங்கொடுக்கும் பணக்காரர்களுக்கும் கடவுள் பொதுவானவர் என்னும் புத்தி புலப்படவில்லையே. அவர்களைச் சொல்லுவதிலும் குற்றமில்லை. நியாயமில்லாத கடவுளைப்பற்றியே அவர்களுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ஓடக்காரத்தெருவில் ஒரு பெண் ணைக்காட்டி ஒரு பெண்ணைக்கொடுப்பார்களாம். அது போலவும் சென்னையில் பெரிய வக்கீல்கள் தங்களைக்காட்டிப் பணம் வாங்கி வக்காலத்தில் தன் குமஸ்தா வக்கீலும் கையெழுத்துப் போடச்செய்து கோர்ட்டிற்குத்தான் போகாமல் யாரையோ போகச் செய்வது போலவும், சாஸ்திரத்தின் ஒரு மூலையில் யாருக்குமெட்டாத இடத்தில் நியாயமாய், சத்தியமாய், பொதுவாய் ஒரு கடவுளிருப்பதாகச் சொல்லி, போன மாதம் தாசி வீதிக்குப் போய் பெண் ஜாதி கோபித்து, முகத்திடியும் பட்டு கோவிலுக்குள் குடி புகுந்திருக்கும் கடவுளையும், சைவக்குருவான சைவ மடாதிபதிகள் தொட்டாலும் பக்கம் நெருங்கினாலும் தீட்டு, குடி, விபசாரம், பொய் முதலியவைகளைக் கொண்ட பார்ப்பார் தொட்டால் பரிசுத்தம் என்கிற கடவுளையுமல்லவோ காட்டுகிறார்கள். இந்த தெய்வத்தை ஆதா

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

எனது இலங்கைப் பிரயாணம்.

(தோழர் அ. இராகவன்)

இயற்கை வளமும், செயற்கை நலமும் செழித்து ஒளிரும் எழின்மிகும் இலங்கைத்தீவிற்கு எமது ஊர்வாசிகளிற்பெரும்பாலோர் சென்று வாணிபத்தில் பெரும் பொருளீட்டி வருகின்றனர். எம் உற்றாரும் நண்பருமான பல்லோர் ஆண்டு வசித்து வருகின்றனர். அன்னோர் இணையிலா இந்திய நன்னாட்டினருகில் இலங்கும் இலங்கைமாநாட்டிற்கு ஒருமுறையாவது போந்து ஆண்டுள இயற்கைக்காட்சிகளையும், மக்களின் நாகரிகங்களையும், பழக்க வழக்கங்களையும் கண்டு வருவதுடன் தங்களுடன் சிறிது நாட்கள் வதிந்து வரும்படி வேண்டிக்கொண்டனர். அவர்களின் விருப்பப்படி கிறுஸ்துமஸ் விடுமுறை நாட்களை ஆண்டுகழித்துவிட்டுவரலாமென்ற நோக்கத்துடன் 18-12-31ல் தூத்துக்குடி மூலமாய்க்கப்பலேறிச் சென்றேன். கப்பலிலே மூன்றுவது வகுப்புப் பிரயாணிகள் படும் கஷ்டங்கள் அளவிட்டுரைக்கமுடியா. பொதுவாக முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு முதலியவைகளில் பிரயாணஞ் செய்வோர் நோயற்ற யாக்கையையுடையவர்கள் என்று இலங்கை அரசாங்கத்தார் எண்ணி மூன்றுவது வகுப்பிலும், டெக்கிலும் பிரயாணஞ் செய்வோருடைய உடைகள் மருந்து கலந்த தண்ணீரில் அவிக்கப்படுவதுடன் அவர்களும் அங்குள்ள தண்ணீரில் குளிக்கப்படவேண்டும் எனச்செய்திருக்கின்றனர். முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு இத்தகைய தொல்லைகளில்லை. தூத்துக்குடி இலங்கை சுங்கவரி இலாகா (கஸ்டம் ஆபீஸ்) வில் கைக்கூலிக்காரர்களின் தொல்லையும் கூலிகளின் தொந்தரவும் அதிகம். கப்பல் பிரயாணத்தினால் எனக்கு ஒருசிறிதும் மயக்கமோ கிறுகிறுப்போ உண்டாகவில்லை. பெரிதும் உற்சாகமும் ஊக்கமுங்கொண்டே சென்றேன். இந்துமஹா சமுத்திரத்தின் தண்காற்று உடலிற்கு இன்பமூட்டியது. பொதுவாக நம் தமிழ் மக்கள் பண்டைக்கால முதலே பார்ப்பன இந்து மதக் 'கொள்கையாகிய' கடல் கடத்தல் கூடாது' என்ற மூட்டாள் சட்டத்தைப்புறக்கணித்து 'திரைகடலோடியும் திரவியந்தேடு' என்ற தமிழ்க்கிழவியின் அமிர்தமொழியைக் கடைப்பிடித்து நீண்டதூரம் கப்பல் பிரயாணஞ்செய்ய அஞ்சினலும் இவ்விலங்கைத்தீவிற்காவது வந்திருக்கின்றார்களே என்று தமிழர்களின் இந்நல்ல கொள்கையை எண்ணி எண்ணி இறும்பூதெய்தினேன். தூத்துக்குடியில் மாலை 5 மணிக்குப்புறப்பட்ட கப்பல் மறுநாள் காலை 9-மணிக்கு கொழும்பின் அழகிய துறைமுகத்தை அடைந்தது. அங்கு எமது நண்பர்கள் பலரும் கப்பலுக்கே நேராகவந்து என்னேத்தமது இல்லத்திற்கு அழைத்துச்சென்றனர். இத்துறைமுகத்திற்கு தோழர் ஈ. வெ. ரா. அவர்கள ஈஜிப்ட் நேசத்தில் கண்ட எம்பிரஸ் ஆவ் பிரிட்டன் என்னும் உலகத்தின் பெரிய கப்பல் வந்தது. யானும் பார்த்து களிக்கும் சந்தர்ப்பம்பெற்றேன்.

கொழும்பின் காட்சி.

இலங்கை தேசத்தின் தலைநகர் கொழும்பேயாகும். இஃதோர் சிறந்த துறைமுகப்பட்டினம். இந்நகரத்தின் கடற்கரை மிகப்பிரசித்தி பெற்றது. இங்கிலாந்து தேசத்தின் மாஜி பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் கனவான் கூட இக்கடற்கரையின் அழகை வியந்து பாராட்டியிருக்கிறார், உலகத்திலுள்ள அழகிய கடற்கரையில் இது ஒன்றும். இவ்வூர் நகராட்சி கழகத்தை (கார்பொரேஷனை) எவரும் போற்றாதிருக்கமுடியாது. நகரத்தின் எல்லாப்பக்கத்திலும் தார்பூசிய அழகிய ரோடுகள் மிகச்சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது. நகரத்தின் பற்பலபாகத்திலும் புற்கள் நிறைந்த மைதானங்களும், சிறுவர்களும் பெரியார்களும் தேகாப்பியாசங்கள் செய்து கொள்ள கூடிய வசதியான "விளையாட்டுஸ்தலங்களும்" நகரட்சிக்கழகத்தின் செலவிலேசெய்யப்பட்டிருக்கிறது. இங்குள்ளபோலீஸ் காரர்கள் எல்லாம் ஆங்கிலம்படித்தவர்களாயிருக்கிறார்கள். நான்பார்த்த அளவில் அவர்கள்கண்ணியமாக நடந்து கொள்பவராகக்காணப்படுகிறார்கள். இவ்வூர் சென்னையைப்போன்ற பெரிய நகரமில்லாத தாயிருப்பினும் பெரிய குதிரைப்பந்தயம் என்னும் சூதாடுமிடமும், சுமார் பதினேந்திற்கு மேற்பட்ட சினிமாக்களும் நகரத்திற்குள் பிரதானமான ரோடுகளிலே கள்ளுக்கடைகளும்வைக்கப்பட்டிருக்கிறது. இஃது இந்த நகரருக்குப் பெரும் இழிவைத்தருவனவாகும். இங்கு பம்பாய் சென்னை முதலிய விடங்களைப்போல் பெரிய கட்டிடங்கள் அதிகமில்லை. உயர்தரக் கலாசாலைகளும் கூடமிகச்சிறிய கட்டிடமாகத்தானிருக்கிறது. சிறியதாயிருப்பினும் ஐரோப்பிய முறையில் வீடுகள்பலவும் நாகரிகமாயும் சுத்தமாயும் நன்கு அலங்கரிகைப் பட்டிருக்கிறது. மேன்மாடிகளில்லாத பங்களாக்களே அதிகம். இந்நகரத்தின் மத்திய பாகம் அதிக ஜன நெருக்கமும் வியாபாரப் பழக்கமும் அதிகமான இடமாக இருந்தாலும், கொள், பிட்டி, வெள்ளவத்தை, பொறளை முதலிய இடங்கள் நிராமாந்திரங்கள் போன்று யாண்டும் மரஞ் செடிகொடிகளும் அழகிய பூஞ்செடிகளும் நிறைந்து, கண்ணிற்கினிய காட்சியாக விளங்குகின்றதோடு வீடுகள் அதிக நெருக்கமில்லாததாயிருக்கின்றன. ஐரோப்பிய நாகரீகம் நேராக இலங்கைக்குத் தான் வந்து இறக்குமதியாகிற தென்று கூறலாம். இங்குள்ள மக்கள் யாவரும் நடை யுடை பாவனை முதலிய எல்லாவற்றிலும் ஐரோப்பியர்களையே பின் பற்றுகின்றனர். கூலிகளும், ரிக்ஷா வண்டிஇழுப்பவர்களும் காற்சட்டை. பூட்ஸ், ஐரோப்பிய தொப்பியாகிய ஹேட்டும் அணிந்தும் விலையுயர்ந்த சேவிகட் சிகரட்டும் குடித்து, ஆங்கிலம் பேசி வருகின்றார்கள். நமதுநாட்டில் நம் வீட்டிற்கு வரும் நண்பர்களை உபசரிப்பதற்கு முதலாவதாக வெத்திலை பாக்குக் கொடுப்பது போல் நாம் எந்த சினேகிதர்கள் வீட்டிற்குப் போனாலும் முதலாவது தேநீரும் ஒரு சிகரெட்டும் தான் முதலில் வரும். கொழும்பு செல்வம் கொழிக்கும் ஒரு நகரமாயினும் அத்தீவின் முக்கிய விளை பொருள்களாகிய தேயிலை, ரப்பர், கொக்கோ, கொப்பரா, முதலியவைகளின் விலை யிறக்கத்திலாலும் உலகமெங்கும் தோன்றிய வியாபார மந்தத்திலாலும் ஜனங்கள் பெரும் அல்லற் பட்டுக் கொண்டும், வேலையில்லார் தொகை அதிகப்பட்டுக் கொண்டும், வரும் பொழுது இலங்கை அரசாங்கத்தார் ஜீவகாருண்யமும் முன் யோசனையுமின்றி முட்டாள் தனமாய்ப் புதிதாய் வருமான வரி (இன்கம் டாக்ஸ்) ஏற்படுத்தியது இலங்கை மக்களை என்றுமில்லாத தூக்கத்துக் குள்ளாக்கியது, இந்நிலையில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் போல் கட்டுபாடுப் பாடும், சுயஜாதி அபிமானமும், ஆங்கிலக் கல்வியில் அதிக முன்னேற்ற மடைந்து அரசாங்க உத்தியோக முழுவதையும் பேங்குகள், பாடசாலைகள் முதலியவைகளிலுள்ள உத்தியோகங்களையும் கைப்பற்றிக் கொண்டு, பிறஜாதியார்கள் அங்கு நுழைய விடாமல் பாதுகாத்துக் கொள்ளும் யாழ்பாணத தமிழர் பண நெருக்கடியுள்ள இச் ந்தர்ப்பத்தை சமாளித்துக் கொள்ளக் கருதி தேசிய இயக்கம் ஒன்று கண்டு அதன் மூலமாய் ஐரோப்பிய உடைகளை வெறுத்து தேசிய உடையணிந்து வருகின்றார்கள் (கதர் உடையல்ல) தேசிய உடை என்பது அரையில் வேஷ்டியும் ஒரு ஜிபாரமும் தோண்ட அங்கவஸ்திரமும். எந்நாட்டுத்துணியை அணிந்திருந்தாலும் அது தேசிய உடையாகவே கொள்ளப்படுகிறது. இத்தேசத்தின் வியாபாரங்கள் பெரும்பாலும் முஸ்லிம்களிடத்திலேயிருக்கிறது. சிங்களவர்கள் வியாபாரத் துறையிலோ, உத்தியோகத் துறையிலோ அதிக முன்னேற்றமடையா திருப்பினும் தற்சமயம் இத்துறைகளில் முன்னேற்றமடைய வேண்டு மென்ற உணர்ச்சியுடன் இந்தியர்களுக்கு விரோதமான கிளர்ச்சியும் நாளடையில் கைக்கொண்டு வருகின்றனர். அது விருத்தியாகிக் கொண்டு வருகிறது. இங்கு தொழிலாளர் இயக்கம் அதிக முன்னேற்றமடைந்து வருகின்றது. தொழிலாளர்களுக்குத் தலைவராய் குண சிங்கம் என்னும் சிங்களவர் வாய்த்தது தொழிலாளரின் பாக்கிய மென்றேகருத வேண்டியது. இவர் சாதாரண மனிதராகவே இருந்து வந்தார். பணக்காரருமல்ல, ஆங்கில பட்டதாரியுமல்ல என்றாலும் தொழிலாளர்களுக்குத் தலைவராய் வந்ததும் தம் செல்வாக்கைப் பெரிதும் உயர்த்திக் கொண்டு இலங்கை சட்ட சபைக்கு நடந்த தேர்தலில் போட்டி போட்டு வெற்றி பெற்று இப்பொழுது ஓர் அங்கத்தினராயிருந்து வருகிறார். இவருக்கு சமயோசித புத்தியும், எதிரியைத் தம் வசமாக்கிக் கொள்ளத்தக்க பேச்சு வன்மையும் பெரிதுமுண்டாம். இவரை இலங்கைத் தொழிலாளிகள் இலங்கை முஸ்லோனி என்று கூறி வருகின்றார்கள். இவருக்கு இந்திய காங்கிரசிடத்திலும், தோழர் காந்தியிடத்திலும் விசேஷ அன்புண்டு.

கல்வி.

கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையைச் சேர்ந்த பற்பல கல்லூரிகள் காலேஜ்கள் இங்கிருக்கின்றன. ஆண்களும் பெண்களும் தாராளமாய் கல்வி பயின்று வருகின்றார்கள். பாடசாலைகளில் பெரும்பாலும் ஆங்கிலத்திலே கல்வி போதிக்கப்படுகின்றது. பாடசாலைகளில் மாணவர்கள் ஆங்கிலத்தைத் தவிர வேறு பாஷைகளில் சம்பாஷணை செய்யக் கூடாதென்ற கட்டுப்பாடும் உண்டு. எனவே மூன்றாவது நான்காவது வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் நன்றாக ஆங்கிலம் பேசுகின்றார்கள். ஆங்கிலம் பயில செலவு அதிகமாயிருக்கிறது. 3வது பாரத்தில் படிக்கும் ஒரு மாணக்கனுக்கு மாதம் 60 ரூபாய் செலவாகிறது. இப்பொழுது தான் தாய் பாஷையாகிய தமிழுக்கு விசேஷ மதிப்புக் கொடுக்க வேண்டு மென்ற உணர்ச்சி தோன்றி தமிழ் நாட்டுக் கலாசாலைகளைப் பின்பற்ற வேண்டு மென்ற எண்ணம் ஜனங்கள் உள்ளத்தில் தோன்றி வருகிறது. அங்கு கேம்பிரிட்ஜ் பி. ஏ.பட்டதாரிக்குள்ள மதிப்பு சென்னை சர்வகலாசாலையில் எம். ஏ. படடம் பெற்று எல். டி. பாஸ் பண்ணியவருக்கு கிடையாதென்பது ஒரு சிறிதும் மிகையாகா. கலாசாலைகளெல்லாவற்றிலும் கணித சாஸ்திரம்மிகக் குறைவாகவே கற்பிக்கப்படுகிறது. மாணவர்கள் நன்றாகவும் விரைவாகவும் ஆங்கிலம் பேசிலும், எழுதுவதிலும் பேசுவதிலும் பெரிதும் இலக்கண தப்பு போட்டு

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குரு, "ஜீன்மெஸ்லியரின்" மரணஸாசனம்.

(மொழிபெயர்ப்பாளர் எஸ். குருசாமி பி. ஏ.)

கட்டுரை 12.

காப்பி ரைட்..

(முன் தொடர்ச்சி)

46. "கடவுளு"க்கும் அறிவுக்கும் சம்மந்தமுண்டா?

நாம் ஒன்றை அறிவுடையது என்று சொல்லவேண்டுமானால் அதற்கு எண்ணங்கள் அபிப்பிராயங்கள் சக்தி முதலியவைவேண்டும். எண்ணங்கள் அபிப்பிராயங்கள் சக்தி இவைகள் இருக்கவேண்டுமானால் அதற்கு உருப்புக்கள் இருக்கவேண்டும். உருப்புக்கள் இருக்கவேண்டுமானால் உடல்இருக்கவேண்டும். பிற உடல்கள்மேல் சக்தியைச் செலுத்தவேண்டுமானால் அதற்கும் ஒரு உடல்இருக்கவேண்டும். பிறருடைய கஷ்டங்களை அறிய வேண்டுமானால், அதுவும்கஷ்டம் என்றால் என்னவென்பதை அனுபவித்திருக்கவேண்டும். ஆகவே இவைகளிலிருந்து விளங்குவது என்னவென்றால் ஒரு பரிசுத்த ஆத்மாவானது அறிவுள்ளதாய் இருக்கமுடியாது என்பதே. ஆகவே உலகத்தில் நடைபெறும் காரியங்களுக்கும் அதற்கும் எவ்வித சம்மந்தம் இருக்கவும் முடியாது. ஆனால் கடவுளினுடைய அறிவு, கடவுளினுடைய கருத்துக்கள், கடவுளுடைய அபிப்பிராயங்கள் முதலியவைகள் கேவலம் மனிதனுடைய அறிவு, கருத்துமுதலியவைகளோடு ஒப்பிட்டுப்பார்க்கவே முடியாது.' என்று சொல்வீர்கள். அப்படியானால் ரொம்ப நல்லது! மனிதனுக்கு சம்மந்தமில்லாத ஒன்றின் அறிவு, கருத்து முதலியவைகளைப்பற்றி, அவைகள் நல்லதா கெட்டதா என்பதை அறிவைக்கொண்டு யோசிக்கவும் அதன் பேரறிவை உணரவும் மனிதனால் எப்படி முடியும்? என்று கேட்கிறேன். அப்படிச்செய்வதுபோல் பாவிப்பதானது நமக்கு ஒன்றுமே தெரியாத ஒன்றைப்பற்றி புகழ்ந்து, வணங்கி, துதித்துக்கொண்டிருப்பது எவ்வளவு அறிவீனமான செய்கை என்பதை நிதானமாய் யோசித்துப்பாருங்கள். கடவுளின் பேரறிவை வியந்து கொள்வதில் சற்றேனும் அர்த்தமிருக்கிறதா என்பதையும் யோசித்துப்பாருங்கள். நம்மால் நிர்ணயிக்க முடியாத ஒன்றைப்பற்றித்துதிப்பது அறிவுடமையாகுமா என்பதையும் சிந்தியுங்கள். ஏன் பாராட்டுகிறோம் என்ற காரணத்தையறியாமல் ஒன்றைப்பாராட்டிக்கொண்டேயிருப்பது புத்திசாலித்தனமாகுமா? புகழ்ச்சி என்பது அறிவீனத்திலிருந்து பிறப்பதாகும். தங்களுக்கு எது ஒன்று விளங்க வில்லையோ அதைத்தான் மக்கள் புகழ்கிறார்கள். அதைத்தான் வணங்குகிறார்கள்.

47, 48. மதத்திற்கும் கடவுளுக்கும் சம்மந்தமேயில்லை.

மனிதர்களோடு எவ்வித சம்மந்தமும் இல்லாததாக வர்ணிக்கப்படும் கடவுளுக்கு மேற்கண்ட அறிவு, கருத்து, அபிப்பிராயம் முதலிய மனித குணங்களைக்கற்பிப்பதிலிருந்து அந்தக் கடவுள் மனிதனுடைய சிருஷ்டியா அல்லவா என்பது தானாகவே விளங்கும். கடவுளுக்கு மனிதனுடைய குணங்களை ஏற்றியதால்தான் கடவுளுக்கும் மனிதனுக்கும் சம்மந்தம் இருப்பதுபோல் தோற்றுகிறது. எல்லையற்றது என்று சொல்லப்படும் ஒன்றின்மேல் இக்குணங்களை ஏற்றிவிட்டு, பிறகு மனிதர்கள் தங்களுடைத்தாங்களை அறிய சக்தியற்றவர்களாய் விடுகிறார்கள். இந்தக் "கடவுள்-மனித" கதம்பத்தினால் ஏற்பட்ட பலன் யாது? ஒன்றும் விளங்காத பூஜ்யமும் மனித அறிவின்-சூன்யமுமே தான் பலன்.

டான்டி (Dante) என்ற புலவர் தன்னால் எழுதப்பட்ட "சுவர்க்கம்" என்ற செய்யுளில் கடவுளானவர் தன்னெதிரில் மூன்று வட்டங்களுக்கு அடியில் தோன்றியதாகவும், அப்போது பல அழகான வர்ணங்கள் தோன்றியதாகவும் எழுதியிருக்கிறார். ஆனால் அந்தத்தோற்றத்தின் ஜ்வலிப்பை ஞாபகம்வைத்துக்கொள்வதற்காக தன்னுடைய முகத்தையே பார்த்துக் கொண்டாராம். ஆகவே, கடவுளை வணங்குவதன் வழியாக மனிதன் தன்னையே வணங்கிக் கொள்கிறான்.

நாம் சிறிது நேரம் யோசித்துப் பார்த்தாலுங்கூட, மனித குணங்கள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள் முதலியவைகளில் ஒன்றுகூட கடவுளுக்கு இருக்க முடியாது என்பது தெளிவாக விளங்கிவிடும். நம்முடைய மதி நிலையைப்பொறுத்தே நமது குணங்களும் கருத்துக்களும் அடிக்கடி மாறுபடுகின்றன. அப்படியிருக்க நம்மைப் போல் கடவுளுக்கும் மதி நிலை என்பது உண்டா? என்பது யோசிக்கக்கூடியதாகும். நாம் எந்த மனிதர்களோடு பழகுகிறோமோ அந்தக்குணங்கள் தான் நமக்கு ஏற்படுகின்றன. ஆனால் கடவுளோ, நீங்கள் சொல்லுகிறபடி தன்னந்தனியே,--ஏகாந்தமாய் இருக்கின்றவர், கடவுளுக்கோ, அவரைப்போல மற்றொருவர் கிடையாது. அவருக்கு ஒரு சமூகத்தில் வசிக்க சந்தர்ப்பமும் கிடையாது. அவருக்கு அந்தத் தேவையும் இல்லை. அவரோ, ஒன்றாலும் அழிக்க முடியாத சந்தோஷத்தில் வாழ்கிறார். ஆகையால், இப்போதாவது ஒப்புக்கொள்கிறீர்களா? எதை?—உங்களுடைய கொள்கைபின்படியே,நல்ல குணங்கள் என்று நாம் சொல்லுகின்றவை அவரிடம் கிடையாது; மனிதனும் அவரிடம் நல்லவனாக நடந்து கொள்ள முடியாது என்பதை இப்போதாவது ஒத்துக் கொள்கிறீர்களா?

49. சிருஷ்டியின் முடிவு தான் மனிதன் என்பது பெரியஅபத்தம்.

மனிதனானவன், தன்னுடைய குணங்களிலேயே மயங்கியவனாய் தன்னைப்போலவே இருக்கும் ஒரு ஜீவனைப்படைப்பதே உலகின்முடிவாகக் கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார் என்று உத்தேசம் செய்து கொள்கிறான். இப்படி நினைப்பதற்குக் காரணம் என்ன? கடவுளை நினைப்பதற்கும் அவரை, வணங்குவதற்கும் வேண்டிய அறிவை கடவுள் எல்லா ஜீவன்களிலும் மனிதன் ஒருவனுக்கே கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதாவது, கடவுள் இவ்வுலகத்தைப்படைத்திருப்பதானது தனுடைய பெருமைக்காகவே என்றும், அவருடைய சிருஷ்டியில் மனிதனைச் சேர்த்ததற்குக் காரணம், தன்னுடைய வேலைகளைப் புகழுவதற்கும், தன்னைத் துதிப்பதற்குமே யாகும் என்றும் இதிலிருந்து ருசுவாகிறதல்லவா? இந்த விதமான எண்ணங்களையுடையவர் தானு உங்கள் கடவுள் என்று கேட்கிறேன். நிதானமாய் யோசித்துப் பாருங்கள்.

1. நீங்கள் கடவுளைப் பற்றி சொல்வதையே எடுத்துக் கொண்டால், மனிதனால் கடவுளை அறிய எக்காலமும் முடியவே முடியாது கடவுளின் சக்தியைப் பற்றியும் மனிதன் துளி கூட உணர்ந்து கொள்ளவே முடியாது.

2. தனக்கு நிகர் என்பதேயில்லாத ஒன்று (கடவுள்) புகழுக்காக ஆசைப்படுகிறதென்பது நம்பக்கூடியதாக இல்லை. ஏனெனில், புகழ் என்பது ஒருவன் தன்னுடைய சக்தியோடு மற்றவர்களுடைய சக்தியையும் ஒப்பிட்டுப் பார்ப்பதினாலேயே ஏற்பட்டக்கூடியதாய் இருக்கிறது.

3. கடவுள் என்பவர் எல்லையற்ற சந்தோஷத்தில், தனக்குத்தானே ஒப்பிடக்கூடியவராய் இருந்தால், அவருடைய அற்ப ஜீவன்களின் வாழ்த்துக்களையும் புகழ்ச்சி உரைகளையும் என் அவர் விரும்பவேண்டும்?

4. பல திறமான வேலைகளைச் செய்திருந்தும் அவருக்குப் புகழ் சிமாத்திரம் இல்லை. ஏனெனில், உலகிலுள்ள எல்லா மதங்களும் அவர் பெருத்த கோபக்காரர் என்று சொல்கின்றன. அவைகளின் (மதங்கள்) முழுநோக்கமும் பாவியான, நன்றியறிதலில்லாத சச்சரவுக்காரனான மனிதனையும், அவருடைய கோபக்காரக் கடவுளையும் சம்மந்தப்படுத்துவதாகவே இருக்கிறது.

50. மனிதனுக்காக கடவுள் இல்லை.

கடவுளுக்காக மனிதனும் இல்லை

கடவுள் எல்லையற்றவர் என்றால், அவர் மனிதனுக்காக இல்லை மனிதன் எறும்புகளுக்காகவா படைக்கப்பட்டிருக்கிறான்? அது போலவேதான் கடவுளும் ஒரு தோட்டத்திலிருக்கும் எறும்புகள் அந்தத் தோட்டக்காரனைப் பற்றியும், அவனுடைய எண்ணங்கள், ஆசைகள் முதலியவைகளைப் பற்றியுமா நினைத்துக்கொண்டிருக்கின்றன. இல்லவே இல்லை. வாசல்ஸ் நிகரத்திலுள்ள பெரிய நந்தவனத்தை அவ்வூர் அரசன் தங்களுடைய வசதியை உத்தேசித்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

பிள்ளைப்பேறு.

மக்கட் பிறப்பை எப்படிக்குறைப்பது?

[சாமி. சிதம்பரனார்]

III.

மக்கட் கூட்டம்பெருகுவதனால் நேரும் துன்பத்தையும், கருத்தடை செய்வதன் மூலம் மக்கட் தொகுதியை குறைக்க வேண்டுவதன் இன்றியமையாமையைப் பற்றியும் முன் இரு கட்டுரைகளில் கூறினேம். மக்கட் கூட்டம் பெருகாமல் இருக்க வேண்டு மென்பதைப் பண்டைக்கால வைதிகர்களுங் கூட ஒப்புக் கொண்டிருக்கின்றார்களென்பதையும் எடுத்துக் காட்டினேம். இக்கட்டுரையில் மக்கள் தோற்றத்தைக் கட்டுப் படுத்துவது எவ்வாறு? என்னும் பொருள் பற்றி ஆராய்ந்து அது பற்றிய நமது முடிவை வெளியிடுகின்றோம்.

வைதீகர்களாக இருக்கின்றவர்கள், ஆண்மக்கள் தங்கள் இன்ப உணர்ச்சியை அடக்கிக் கொண்டு பிரமச்சரிய விரதத்தை மேற் கொள்வதன் மூலந்தான் மக்கள் தோற்றத்தைக் குறைக்க வேண்டுமென்று கூறுகின்றனர். மக்கட் கூட்டத்தைக் குறைக்கும் பொருள் பற்றிக் காலஞ் சென்ற சுவாமி **ராமதீர்த்த பரமஹம்சர்** என்னும் சீர்திருத்த பெரியார் கூறியிருப்பதைக் காண்போம். இவர் பால்ய விவாகத்தை நிறுத்துவதன் மூலம் ஜனத்தொகையைக் குறைக்க லாமென்று கூறுகின்றார். இவர் கூறுவதாவது:—

"ஒரு சமூகத்தில் ஜன நெருக்கம் மிகுதிப்பட்டு விடுமானால் - மிகுந்த கூட்டத்திற்கு இன்பமாக வாழும் வழியைக் காட்டாமற் போனால் சமூக வாழ்க்கையில் கொடிய போட்டி ஏற்பட்டு அமைதியை அழித்து விடும். அப்படிப்பட்ட காலங்களில் தான் தேச சமூகங்கள் எல்லாம்சீர்குலைந்து பாழாகத் தொடங்கும். உரோமர்களின் அரசாங்கம், கிரீஸ்தேச மேன்மை, மற்றுமுள்ள தேச சரித்திரங்கள் எதை எடுத்துக் கொண்டாலும் இந்த ஜனத்தொகை விஷயமே தீமைகளுக்கு அடிப்படையாயிருப்பது விளங்கும். இந்தியாவில் நிரம்பிய நாட்களாகவே இவ்வித காரணம் ஏற்பட்டு விட்டது. அதற்கு நாம் யாதொரு பரிகாரமும் செய்யவில்லை. உலகத்திலேயே எந்த நாட்டிலும், இவ்வளவு அதிக ஜனத் தொகையுடன் வறுமையும் கூடியிருப்பதாகக் காணப்பட வில்லை."

"முன்னொரு காலத்தில் இந்தியாவில் குடியேறிய ஆரியர்களுக்கு "மிகுதியான மக்களை உண்டாக்க வேண்டும்', என்ற அவசிய மிருந்தது உண்டு. அக்காலம் போய் விட்டது காலம் தலைகீழாக மாறி விட்டது. மக்கட் கூட்டம் இப்பொழுது நிரம்பிப் போய் விட்டபடியால் குடும்பத்தைப் பெருக்க வைப்பது அதர்மமாகி விட்டது. "இறந்த பின் துறக்கம் பெறுவதற்குப் பிள்ளைகள் கட்டாயமாக வேண்டும்" என்று அறிவீனத்தால் நினைக்கின்றவர் கண் திறந்து பார்க்கட்டும். இறப்பதற்கு முன்பே உங்கள் வீடுகளை நரகமாக்கி விடுகிறீர்களே! மக்களை அதிகப்படுத்திக் கஷ்டங்களை உண்டாக்கிக் கொள்ளுகிறீர்களே!

"அவிவேகமான காலந் தவறிய குருட்டுக் (பால்ய) கல்யாணங்களை நிறுத்துங்கள். இதுவே தேசத்தின் தாழ்வைக் கொஞ்சம் குறைக்கக் கூடியதாகும். ஜனத்தொகை அதிகமாவதைக் குறைக்கும் ஐரோப்பியாவிலும் இளம் பருவத்திலேயே கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள் என்றாலும் இந்தியர்களைப் போல இவ்வளவு இளமையில் செய்து கொள்ளுவதில்லை. அனேகமாக முப்பது வயதுக்குள் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவதில்லை. அவர்களின் கொள்கை "குழந்தைகள் குறைவாக இருக்க வேண்டும்; ஆனால் திடமுள்ளவைகளாக இருக்க வேண்டும் என்பதேயாம்."

மேற் கூறியவற்றைக் கொண்டு சுவாமி ராமதீர்த்த பரமஹம்சர் அவர்களின் சிறந்த கொள்கையை உணரலாம். இந்த வழி மக்கள் கைகொள்ளக் கூடிய வழியே யாகும். இது செய்ய முடியாத காரியமல்ல.

ஆனால் முழு வைதீகர்களாகஇருக்கின்றவர்கள் கூறும் வழியைக் கவனிப்போம். திரு. காந்தியவர்கள் ஒரு சமயத்தில் ஜனத்தொகையைக் குறைக்கும் பொருள் பற்றி எழுதும் போது "மக்கள், தங்கள் மனதையடக்கி, இந்திரிய நிக்கிரகம் செய்வதன் மூலம் புத்திர உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதே மேன்மை. இதுவே சன்மார்க்கமாகும்." என்ற கருத்தை வெளி யிட்டிருக்கிறார். இது தான், ஜனத் தொகையைக் குறைக்க வேண்டும் என்னும் பிரச்சினையை ஒப்புக் கொள்ளுகின்ற முழு வைதீகர்களின் கருத்தாகும். இது நமது இந்து மத நூல்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கையாகும். பிரமச்சரிய விரதங்காத்தலையும், இந்திரிய நிக்கிரகம் பண்ணுதலையும் இந்து மத நூல்களெல்லாம் ஒப்புக் கொள்ளுகின்றன. ஆகையால் வைதீகர்கள் சாஸ்திரங்களுக்கு மாறுபடாத வகையில் ஒருவாறு இதை ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் இந்த முறை அதாவது ஆண் பெண் சேர்க்கையை நிறுத்துவதன் மூலமாகப் பிரஜா உற்பத்தியைக் கட்டுப் படுத்துவதை உலக மக்கள் நடத்தையில் காட்ட முடியுமா? என்பது பற்றி ஆராய்வோம்.

ஆண்களோ, அல்லது பெண்களோ தமது இன்ப உணர்ச்சியைக் கட்டுப் படுத்துவது என்பது இயற்கைக்கு முரணான விஷயம். ஆயிரத்தில் ஒருவர் இவ்வாறு இருக்கலாம். மற்றவர்கள் எப்படியும் அதை அநுபவித்தே தீருவார்கள். இந்திரிய நிக்கிரகத்தின் மேன்மையைப் பற்றியும், காம உணர்ச்சியின் இழிவைப் பற்றியும், சதா படித்துக் கொண்டும், புகழ்ந்து கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கின்ற வைதீகர்களாலேயே தங்கள் மனத்தை அடக்க முடியவில்லையே. இத்தகைய வைதீகர்களே அதிக இன்பவுணர்ச்சியில் மூழ்கி கணக்கற்ற பிள்ளைகளைப் பெறுவதைக் கண் கூடாகப் பார்க்கின்றோம் அல்லவா? இப்படியிருக்க உலக நாகரீகத்தில் ஈடுபட்ட உற்சாக முள்ள மக்கள் எவ்வாறு இந்த இயற்கை உணர்ச்சியை அடக்கிக் கொண்டு வாழமுடியும்?

மிருகங்களும், பறவைகளும் கூட ஒன்றோடு ஒன்று இணைந்து வாழ்வதற்கு இந்த இன்ப உணர்ச்சியே காரணமாக இருப்பது கண் கூடு. இது போல் ஆண் மக்களிடமும், பெண் மக்களிடமும் இவ்வுணர்ச்சி இன்றேல் ஆண் பெண் கூட்டுறவு வாழ்க்கையே பாழ்படும். ஆகையால் "இந்திரிய நிக்கிரகம் பண்ணுவதன் மூலம் பிரஜா உற்பத்தியைக் கட்டுப் படுத்த வேண்டும்." என்னும் வைதீகர் கூற்றைக் கைவிடுவதே இயற்கையாகும்.

இனி வேறு எந்த வகையினால் தான் ஜனத்தொகையைக் குறைக்கலாம் என்பதைப் பற்றி ஆராய்வோம் ஆண் பெண் இரு பாலரும், தங்கள் விரும்பிய வரையிலும் உடல் நலத்திற்கு இடையூறு நேராதவாறு உலக இன்பத்தைத் தாராளமாக அடைய வேண்டும். ஆனால் பிள்ளை பிறக்காமல் தடுத்துக் கொள்ள விரும்பினால் அவ்வாறே தடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கான முறைகளைக் கைகொள்ளுவதே உலக இயற்கைக்குப் பொருந்தியதாகும்.

சிலர் கரு உண்டான பின் அதை அழித்து விடுவதன் மூலம் புத்திரப் பேற்றைத் தடுக்கலாம்எனக்கூறுவர். இது சிறிதும்சிவகாருண்ய மற்ற கூற்றாகும். இதனால் உலகில் சன்மார்க்கமென்பதே இல்லா தொழியும். அன்றியும், இதனால் எண்ணற்ற நோய்களும், சாவுகளும், பலமற்ற தன்மையும் இவ்வாறு செய்கின்றவர்களுக்கு உண்டாகு மென்பதில் ஐயமேயில்லை. ஆகையால் இத்தகைய அபிப்பிராயம், காதினாலும் கேட்காமல் வெறுக்கக் கூடிய தொன்றாகும்.

கரு உண்டாகாமலே செய்து கொள்ளுவது தான் சிறந்த வழியாகும். கரு உண்டாகாமல் தடுப்பதற்குப் பல முறைகள் உண்டு. அவைகளைக் கருத்தடை பற்றி எழுதப் பட்டிருக்கும் புத்தகங்களைப் படித்தும், டாக்டர்களைக் கேட்டும் உணர்ந்து கொள்ளலாம். ஈண்டு அவைகளை எழுதுவது முறையாகாது. ஆகையால் அந்த முறைகளைப்பற்றி கூறாமல் விட்டு விட்டு அவைகளின் மேன்மையை மாத்திரமே கவனிப்போம்.

கரு உண்டாகாமல் தடுக்கும் முறையினால் ஜனத் தொகையைக் குறைக்கும் முயற்சியே எளிதில் நிறைவேறக் கூடியதாகும். மக்கள் தங்கள் விருப்பத்தையும், கட்டுப் படுத்திக் கொண்டு துன்புற வேண்டிய கட்டாயமில்லை. உலகத்துன் பத்திற்குக் காரணமான மக்கட் பேற்றையும் வேண்டிய அளவோடு நிறுத்திக் கொள்ளலாம். இம் முறையைத்தான், பிரான்சு, ஜெர்மெனி, அமெரிக்கா முதலியநாடுகளில் கையாண்டு வருகின்றனர், கருத்தடை முறையில் தேர்ந்தடாக்டர்கள் மற்ற நாடுகளைவிட பிரான்சிலேயே மிகுதியாக இருக்கின்றார். மக்களும். ஆவலோடு இம்முறைகளைக்கைப்பற்றி தங்கள் விருப்பப்பதை நிறை வேற்றிக்கொள்ளுகின்றனர்.

ஆனால் நமது இந்தியாவிலோ, டாக்டர் களே, கருத்தடைசெய்வதைப்பாவமான காரியமாக நினைக்கின்றனர். இதற்கு அவர்களுடைய வைதீகமும் மூடநம்பிக்கையுமே காரணமாகும். ஆகையால் அரசாங்கத்தார் ஆதரவுபெற்ற முயற்சியின் மூலம் தான்இதை நிறைவேற்றமுடியும்.

கருத்தடை முறையில் பயிற்சி பெற்ற டாக்டர்கள் முதலில்நமது நாட்டிற்கு அதிகதேவையாகும். இத்தகைய டாக்டர்களைக் கொண்டு, ஜன சமூகம் பெருகுவதனால் உண்டாகும் தீமையைப்பொது ஜனங்கள் உணரும்படி பிரசாரம் பண்ணவேண்டும். கருத்தடை செய்துகொள்ள விரும்புகின்றவர்களுக்கு இலவசமாக உதவி புரியவேண்டும். இவ்வாறுசெய்வதனால்தான் ஓரளவாவது நமது நாட்டு மக்கள் மனத்தில் மாறுதலையும். கருத்தடையில் நம்பிக்கையும் உண்டாக்கமுடியும் என்பது நிச்சயம்.

பால்யமணத்தைத் தடுப்பதேமதவிரோதம், சாஸ்திர விரோதம்என்றுகூச்சலிடுகின்ற வைதீகர்கள் நிறைந்தநாட்டில் இவ்விஷயம் எதிர்ப்பில்லாமல் நிறைவேறு மென்று ஒருநாளும் எதிர்பார்க்க முடியாததாகும். ஆகையால் இதுபோன்ற நாட்டிற்கு நன்மைதரும் உண்மையான சீர்திருத்தங்களையெல்லாம் நாளடைவில் கஷ்டப்பட்டு தான் நிறைவேற்ற வேண்டும்.

——

சூன்யம், உண்மையா, அல்லது மருளா?

மந்திரத்தால் பலனுண்டா?

பொய் நம்பிக்கைகளால் வருங்கேடு.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

ஒரு நிருபர், சிலர் சூன்யம்வைத்ததாகச் சொல்லும் சில கேஸுகளை, தானே கண்டதாகவும், மந்திரத்தால் அந்த கேஸ்கள் குணப்பட்டதாகவும், தனது அனுபவத்தால் சூன்யத்தை நம்புவதாகவும், அதன் விஷயமாக இரண்டொரு கேஸ் விபரங்களையும் எழுதி, அவை எவ்விதம் நடந்திருக்கக்கூடுமென விளுவுகின்றார். இவருக்குக்கொடுக்கும் விளுவிடையை "குடி அரசு"க்கு எழுதி தெரிவிக்கும்படியாகவும் கேட்டுக்கொள்கின்றார். இத்தியாதி புராதன நம்பிக்கை விஷயமாக நாம் ஒன்று கவனிக்க வேண்டும் தகுந்த விசாரணையின்றி, ஆராய்ச்சியின்றி, கண்டதையெல்லாம், கேட்டதையெல்லாம் நம்பவேண்டுமானால், எதையும் நம்பலாம். குருட்டு நம்பிக்கைக்கு கணக்கு வழக்கென்பதில்லை. பில்லி; சூன்யம், மந்திரம் முதலிய சமாதானமெல்லாம் (Explanation) நிகழும் சம்பவங்களை தீரவிசாரித்து அறியாமல், கொடுக்கும் வியாக்கியானங்களே. "தும்முவதால், போன காரியம் கெட்டு விட்டது, அவன் கண்பட்டதால், நோய் வந்தது, காரியம் குணமாயிற்று எரிமுகத்தில் விழித்தபடியால்" என்ற இத்தகைய மூட நம்பிக்கைகளை, நடந்த விஷயத்திற்கும், கொடுகும் சமாதானத்திற்கும், என்ன சம்பந்தம் என்ற மனப்பான்மையை வளர்ப்பதில்லை. வேடர்கள், நாளொன்றுக்கு அநேக ஜந்துக்களைப் பார்க்கின்றார்கள், அவர்களுக்குப்போதுமான உணவு கிடைப்பதில்லை. போகும்வழியில் சளி பிடித்தவன், ஆயிரந்தடவை தும்முகின்றான். அதனால் அதனைக்கேட்டோர் காரியங்கள் கூடிவந்ததாகத்தெரியவில்லை. கோர்ட்டில் ஜட்ஜ்களை வசியம் செய்ய, மந்திரித்த குங்குமத்தை நெற்றியில் அணிந்து செல்கின்றனர். அவர்கள் கேஸ்கள் சாதாரணமாக ஜெயித்ததாகத் தெரியவில்லை. கிருத்திகை அமாவாசையில் "படுத்தார் தேரார்" என்றும் வழங்குகின்றார்கள். ஆனால் ஆஸ்பத்திரிகளில் அந்நாட்களில், நோய் அதிகரிப்பதாகத் தெரியவில்லை. ஆனால், பலர் இத்தியாதி சம்பவங்களில் நம்பிக்கை வைத்து தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றார்கள். இவைகளால் என்ன தெரிய வருகின்றதென்றால், சாதாரணமாக, சொன்னதையும், கேட்டதையும் நம்புவதே, நமது பழக்கமாய் விட்டது. இதே மாதிரி, பலர் சோத்திடத்தையும் நம்புகிறார்கள். கிரகங்களால் நமது வாழ்வு பாதிக்கப்படுகிறதாகச்சிலர் சொல்வதை நாம் நம்புகின்றோம். கோடான கோடி மைல் தூரத்தில் இருக்கும் கிரகங்களுக்கும் நமக்குமென்ன சம்பந்தம் என்பதை விளக்கிக்காட்டுவார் ஒருவருமில்லை.

சூன்யத்தால், "அது நடந்தது, இது நடந்தது" என்று சொல்வதெல்லாம் நடந்த சம்பவங்களுக்கு நாம் கொடுக்கும் சமாதானங்களாகும். இந்த சமாதானங்கள், சரியானவையா, அல்லது கேள்விப்பேச்சா என்பதைத்தான், நிச்சயப்படுத்த வேண்டும். நமது நிருபர் பார்த்த கேஸை எடுத்துக்கொள்ளுவோம். தொந்திரவு படும் பெண்ணின் தாலி, கழுத்திலிருந்து காணுமலும், திரும்பக்காணப்பட்டதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இதன் காரணமென்ன? சாமான்ய ஜனங்கள் சூன்யத்தால் இந்தவிதமாக சம்பவிக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இது சரியான காரணமா வென்பதுதான் கேள்வி. அந்தப்பெண்ணின் சேலை திடீரென தீப்பற்றிக்கொள்கின்றதாம் கைவைக்கும் பண்டங்களில் மலம் தோன்றுகின்றனவாம்! இருக்கலாம். ஆனால், அதன் காரணமென்ன? மந்திரத்தாலா, அல்லது நாம் பொருமையுடன் கவனிக்காத தோஷத்தால் இவ்வித சமாதானத்தைக் கொடுக்கின்றோமா?

கோபத்தில் தாலியைக் கழற்றி யெறியும் பெண்கள் அநேகரைப்பார்த்துமிருக்கின்றோம். இந்தப் பெண்கள் சூன்யத்தால் செய்கின்றார்களென்றுகிலும், பேய் பிடித்து செய்கின்றார்களென்றுகிலும், யாரும் சொல்வதில்லை. சில வியாதியுடையவர்கள், தங்கள் சேலையைக்கொளுத்திக் கொள்கின்றார்கள். மனவெறுப்பாலும் இந்தக்காரியத்தைச் செய்கின்றார்கள். பைத்தியம் முதலிய மனவெறுப்பால் தன் மலத்தைக்கையாளும்நோயாளியைப்பார்த்துமிருக்கின்றோம். இந்த கேஸ்களில், பில்லி சூன்யமென்று யாரும் நம்புவதில்லை. சாதாரணமாக, கோபத்தாலோ மனவெறுப்பாலோ, மன மாறுதலால் (Insanity) நிகழ்வதாக நிர்ணயிக்கின்றோம். நமது நிருபர், பார்த்த காரியங்கள் ஜன்னி நோயால் (Nervous Disorders) நேருவது சகஜம். இவைகளைவிட ஆச்சரியமான காரியங்கள், ஜன்னி நோயால் பீடிக்கப்பட்டோர் செய்கின்றார்கள். குழந்தைகள், மலத்தைப் பூசிக்கொள்வதை அறிவின்மையால் என்று சொல்லுகின்றோம். ஆனால், அறிவை இழந்த முதியோர் செய்தால், அதை சூன்யத்தால் என்கின்றோம். ஏனெனில், குழந்தைகள் செய்வது தினகாட்சி (Common) முதியோர் செய்வது அபூர்வம் (Rare)!!!

நரம்பைப்பற்றிய வியாதி (Hysteria) மிகுதியும் பெண்களுக்கு வருவதுண்டு. அந்த வேளையில் பல அசங்கிதமான காரியங்களைச் செய்வார்கள். தங்கள் புடவையை கழற்றி எறிந்து விடுவார்கள். கொளுத்திக்கொள்வார்கள். தங்கள் எச்சில், மலம்முதலிய வஸ்துக்களை வீசி எறிவார்கள். கண்டபடி எல்லாம்பேசுவார்கள். நரம்புப்பற்றிய வியாதி ஆஸ்பத்திரிகளில், இவர்கள் கோராமையைக்காணலாம். இதற்கு வைத்திய நிபுணர்களால் தான் சிகிச்சை செய்து கொள்ளவேண்டும். இந்த நோய்களுக்கு ஆஸ்பத்திரிகளில், மந்திரங்கள் செய்வதில்லை.

மணி மந்திரங்கள் அறியாதாரிடத்தும், அஞாகரீகரிடத்துமே காணலாம். இத்தியாதி நடக்கைகளை வைத்தியர்களைக்கொண்டு பார்வையிட்டு சிகிச்சை செய்வதுதான் புத்திசாலித்தனமாகும். இல்லாவிடில் கெட்டிக்காரலாயர்களைவைத்து கேசை நடத்தாமல் நெற்றியில் மந்திரித்த குங்குமத்தை இட்டுக்கொண்டு ஜட்ஜ்முன் காட்டுவதையொக்கும். ஒருகாலத்தில் குளிர். சுரத்தையும், அம்மையும் பேதியும், மாரியாத்தா தெய்வங்களால்உண்டாவதாக எண்ணி இருந்தோம் இன்றைக்கும் பலகோடி பாமரமக்கள் நமது நாட்டில் தேவதைகளால் இத்தியாதி வியாதிகள் நிகழ்வதாக எண்ணி மஞ்சள் துண்டும் குங்குமம் மஞ்சளும் அணிகின்றார்கள். இந்த அறியாமையால் லட்சம் லட்சமாக நமது நாட்டு மக்களை இழக்கின்றோம் ஆதலின் நமது நண்பர் அறியாத பெண்கள் செய்வதையும் மோசமந்திரக்காரர் சொல்வதையும் நம்பாமல் தக்க வைத்தியரைக்கொண்டு அந்த அம்மையாரை பார்வையிடச்செய்து (Observation) தெரிந்துகொண்டால் நலமாகும். சிறுவன் திடீரெனத்தினுள் பல ஜாதிகள் இருந்ததாகக்கண்ட காட்சியில் விசேடம் ஒன்றும் நமக்குத்தோன்றவில்லை, ஜாதிகள் செத்துப்போன சதையில் அந்த சிறுவனுக்குத்தெரியாமலே பொத்திக்கொண்டிருக்கலாம் சிலகாலம், பிறகு அந்த இடத்தில் ஏதோ காரணத்தால் ரத்தம் பரவவும் ஜாதியின் உணர்ச்சி உண்டாயிருக்கலாம். எப்படியெனில் குலோரபாரம் (Chloraform) முதலிய உணர்வை நீக்கும் வஸ்துக்களைக்கொண்டு அச்சமயம் நோய்தெரியாமல் செல்வதுபோல அச்சிறுவனுக்கு விளையாடும் காலத்திலோ, அல்லது தேக உறுப்பு உணர்ச்சியற்ற இடத்திலோ, அந்த ஜாதிகள் பொத்தி இருக்கலாம். பிறகு நோய் தொடுத்திருக்கலாம். இவைகளில் அபூர்வமொன்றுமில்லை.

ஆஸ்பத்திரியில் நீராமல், மந்திரக்காரனுல் தீர்ந்தது என்று சொல்வதில் யாதொன்றும் விசேஷமில்லை. ஆஸ்பத்திரியில் எல்லா வியாதிகளும் தீரும் என்பதொன்றுமில்லை, ஆஸ்பத்திரி சிகிச்சையால் தீர்த்துக்கொண்டுவந்திருக்கலாம். வீட்டுக்கு வந்த பிறகு, பூரணமாகக் குணமடைந்திருக்கலாம். இந்தத் தருவாயில், மந்திரத்தை மந்திரக்காரன் செப்பி இருக்கலாம். பிந்தி வந்தவனுக்குக் கிடைத்தது எல்ல பெயர்!!!

நமது நிருபர் நான் கொடுத்த சமாதானத்தை முடிவென்று கருத வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன். வேறு சமாதானங்களும் இருக்கலாம். ஆனால் அவை எவையாயினும், அறிஞர்களால் பார்வையிடப்பட்டு தேர்ந்த சமாதானங்களாக இருத்தல்வேண்டும்.

குறிப்பு:—பில்லி, சூன்யம், எவல், முனி அறைதல், அண்ணமார், கன்னிமார், சேட்டை, காற்று, கருப்பண்ணன் என்று வழங்கும் சொற்கள் எந்தப் பொருளையும் குறிப்பதாகச் சொல்கின்றவர்களுக்கே தெரியாது. இவை எதுவும் நிச்சயிக்காத (Vague) சொற்கள். இன்னகாரணமென்று விளங்காத நோய்களுக்கும், செயல்களுக்கும், இந்தச்சொற்களைக்காரணமாகஉபயோகிக்கின்றார்கள். இந்தச் சொற்களைக் கேட்டமாத்திரத்தில், நடுக்கமுறுகிறார்கள். ஆனால் அவ்வார்த்தைகள் இன்னவை என்று யாரும் பார்த்திலார். அதற்கு ஆடும், கோழியும், முயல் காதும், ஒணனும் தலைச்சன் குழந்தை கைகால் விரலும்: மஞ்சளும், குங்குமமும் நால் வழிகூடும் இடமும், சுடுகாடும், பிறக்கடையும் இன்னும்பல சம்பந்தமில்லா மந்திர தந்திரங்களும் பரிகாரங்களென வழங்குகின்றார்கள். இத்தியாதி பித்தலாட்டங்களால் பாமர மக்கள் மயங்கி தங்கள் பிள்ளைகளை சரியான சிகிச்சையின்றி சாகவைக்கின்றார்கள். இந்தச் சமூக மோசங்களைத் தடுப்பதற்கு வைத்திய ஞானம் பாமர மக்களுக்குப் பரவச்செய்யவேண்டும். இரண்டாவது ராஜாங்கத்தார் "மத நடு நிலை" என்ற பாசாங்கை விட்டு விட்டு, பில்லி, சூன்யமென்று ஏமாற்றுகின்றவர்களைத் தண்டிக்க சட்ட விதிகள் செய்யவும் வேண்டும்.

குடி அரசு.

ஈரோடு 1932 மார்ச்சுமீ 27-உ

தீண்டாமையே இந்துமதம்.

—:0:—

அகில இந்திய தீண்டாமை விலக்குச் சங்கத்தின், சென்னைக் கிளையின் ஆதரவில் சென்ற 17 - 3—32 வியாழனன்று, காலஞ்சென்ற சுவாமி, சிரத்தானந்தர் அவர்களின் உருவப் படத்தை வைக்கும் பொருட்டு, சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் தலைமையில் சென்னைக் கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. கூட்ட ஆரம்பத்தில், திரு. பாத்ரோ அவர்கள்,

"தீண்டாதாருக்கு இந்து சமூகம் செய்துள்ள தீமைகள் கொஞ்சம் அல்ல. அதை ஆகற்றுவதற்குப் பல சீர்திருத்தக்காரர்கள் பாடுபட்டு வந்திருந்தும், இன்று வரையிலும் இக்கொடுமை அழியாமல் இந்தியாவில் நிலைத்து வருவது வருந்தத் தக்கதாகும். ஒரு சமூகத்தாரைத் தொடவும் கூடாதென மிருகங்களைக் காட்டிலும் இழிவாக நடத்துவதை விடக் கொடுமையான விஷயம் வேறுமுன்றுமில்லை. புத்தர் போன்ற பெரியார்களின் உபதேசங்கள் இந்நாட்டில் தோன்றியிருந்தும், இன்னும் இத்தீண்டாமைக் கொடுமை ஒழியாமலிருப்பதற்குக் காரணம் இந்து சமூகத்தில் உள்ள மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களுமேயாகும்."

என்று பேசியிருக்கிறார். இதைக்கொண்டு, நமது நாட்டில் தீண்டாமை நிலைத்திருப்பதற்குக் காரணம் இந்து மதமும், அதைக் கைப் பற்றியிருக்கும் மக்களிடமுள்ள மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களுமே யென்பதை அறியலாம். ஆனால் அதே சமயத்தில் சேலம் திரு, சு. விஜயராகவாச்சாரியார் அவர்கள் பேசும் போது,

"இப்பொழுது நாம் யோசிக்க வேண்டிய விஷயம் தீண்டாமையை எப்படி விலக்கலாம் என்பதைப் பற்றியேயாகும். தீண்டாமை எப்படி வந்தது என்பதைப் பற்றி யோசிப்பதோ, அல்லது இந்து மதத்தின் மேல் குறை கூறிக் கொண்டிருப்பதோ தீண்டாமையை விலக்குவதற்குரிய வழியாகாது. இந்து மதந்தான் தீண்டாமைத் தொல்லையைப் புகுத்தி விட்டது என்று சொல்ல வே முடியாது. இந்து சமூகம் தீண்டாமை நிலைத்திருப்பதை ஒப்புக் கொள்ளவேயில்லை யென்று துணிந்து கூறுவேன்".

என்று இந்து மதத்தைப் புகழ்ந்தும், தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொண்டும் பேசியிருக்கிறார். ஆகவே இவ் விருவர்களின் கருத்துக்களையும் கவனித்தால் "தீண்டாமைத் தொல்லைக்கு இந்து மதம் காரணம்" என்று திரு. பாத்ரோ கருதுவதாகவும், "இந்து மதம் தீண்டாமையை ஒப்புக் கொள்ளவில்லை. ஆகையால் இந்து மதத்தைக் குறை கூறுவது தவறு" என்று திரு. விஜயராகவாச்சாரியார் கருதுவதாகவும் அறியலாம். ஆனால் எது உண்மையான அபிப்பிராயம் என்பதைப்பற்றி நாம் சிறிது ஆராய்வோம்.

இன்று தீண்டாத மக்களை உயர்ந்த சாதிக்காரர்கள் என்பவர்கள் வசிக்கும் தெருவில் நடக்கக் கூடாது என்று தடுப்பதற்கும், தீண்டாதார்களை, உயர்ந்த சாதியினர் என்பவர்கள் தண்ணீர் எடுக்கும் குளம், கிணறு முதலியவைகளில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தடுப்பதற்கும், அவர்களைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்கக்கூடாது என்று தடுப்பதற்கும் காரணம் இந்து மதமும், அதில் உள்ள மூடப் பழக்க வழக்கங்களும் அல்லவா என்று கேட்கிறோம்.

இன்று மலையாள நாட்டைச் சேர்ந்த குருவாயூரில், தீண்டாத மக்கள் கோயில் பிரவேசத்திற்காகச் செய்யும் சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நிற்கின்றவர்கள், உயர்ந்த சாதியென்று சொல்லிக் கொண்டிருக்கும் வைதிக இந்துக்கள் தானே. இதைப் போலவே பம்பாய் மாகாணத்தில் உள்ள நாசிக் என்னும் ஊரில் தீண்டாதார்கள் கோயில் பிரவேச உரிமையின் பொருட்டுச் செய்யும் சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நிற்பவர்களும் உயர்ந்த சாதி யென்று சொல்லிக் கொண்டிருக்கும் வைதிக இந்துக்கள் தானே. இந்த உயர்ந்த சாதிக்காரர்களான வைதிக இந்துக்கள் இவ்வாறு தீண்டாதவர்களின் உரிமைகளுக்கு எதிரிடையாய் இருப்பதற்கு, இந்து மதத்தையும், இந்து மத சாஸ்திரங்களையும் தவிர வேறு ஏதாவது காரணம் உண்டா என்று தான் கேட்கிறோம்.

பார்ப்பனர்கள் வருணாச்சிரம தருமத்தின் பேராலும், சனாதன தருமத்தின் பேராலும், கூட்டங்கள் கூட்டுவதற்கும், மகாநாடுகள் நடத்துவதற்கும், அந்தக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும், தீண்டாதவர்கள் ஆலயங்களுக்குள் செல்ல வேண்டு மென்று கேட்பதும் அதற்காக முயற்சி செய்வதும், இந்து மதத்திற்கு விரோதமான தென்றும், தீண்டாதார்க்குக் கோவில்களுக்குள் செல்லவும், உயர்ந்த சாதி இந்துக்களுடன் சமத்துவமாகப் பழகவும் உரிமை கொடுத்து விட்டால் இந்து மதம் அழிந்து விடுமென்றும் தீர்மானங்கள் செய்வதற்குக் காரணம் இந்து மதமும், இந்து மதசாஸ்திரங்களும் அல்லவா என்று தான் கேட்கின்றோம்.

பாமர மக்களால், மகாத்மாவாக மதிக்கப்படும், திரு, காந்தி அவர்கள், தீண்டாமையின் கொடுமையைப் பற்றியும், அதை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், பேசியும் எழுதியும்வருகின்றார், ஆனாலும் "தீண்டாமை ஒழியவேண்டும்; ஆனால்வருணாச்சிரமதருமம்நிலைத்திருக்கவேண்டும்", என்றும், 'பிறப்பினால் ஒவ்வொருவரிடம் குணவேறுபாடு உண்டு' என்றும், 'ஆத்மாவில்தான் எல்லாரும் சமத்துவமே ஒழிய உடம்பில் சமத்துவமில்லை' என்றும் சொல்லுக்கொண்டுதான் தீண்டாமையை ஒழிக்க வழிதேடுகிறார். இவ்வாறு அவர் சொல்லுவதற்குக் காரணம் அவர் படித்த இந்துமத சாஸ்திரங்களும், அவர் நம்பும் இந்துமதமும் அல்லவா என்று தான் கேட்கிறோம்.

இனி இந்துமத நூல்களில் வருணாச்சிரம தருமத்தைப்பற்றிக் கூறப்படாத சாஸ்திரங்கள் எவையேனும் உண்டென்றும் எவராலேனும் சொல்லமுடியுமா? திரு. காந்தியினாலும், மற்றும் இந்து மத வைதிகப்பண்டிதர்களாலும் மற்றும் சீர்திருத்த வாதிகளாலும் கூடப்புகழ்ந்து பேசப்படும் 'கீதை'யில்தான் வருணாச்சிரம தருமத்தைப்பற்றிக் கூறப்படவில்லை என்று சொல்ல முடியுமா?

'பார்த்தனே! பெண்கள் வைசியர்கள் சூத்திரர்கள் பாபயோனியில் பிறந்தவர்களானாலும் அவர்களுள் என்னை நம்பியிருப்பவர்கள் யாரோ அவர்கள்பரமபதத்தைச்சேர்வார்கள்

'புண்ணிய ஜென்மமுள்ள பிராமணர்களும் ராஜரிஷிகளும் பக்தியுள்ளவர்களாய் என்னை ஆசரிப்பதற்குச் சொல்லவேண்டுமா?!

(பகவத்கீதை அத்தியாயம் 9. சுலோகம் 32, 33)

மேற்காட்டியுள்ள பகவத்கீதை எதைப்போதிக்கின்றது. பிறப்பிலே ஜாதி உண்டு என்பதைப் போதிக்கவில்லையா? இந்த கீதையைப்பாராயாணம் பண்ணிக்கொண்டிருப்பதுதான் சுயராஜியம் பெறுவதற்கும் மோட்சம் பெறுவதற்கும் வழி என்று நம்பிக்கொண்டிருப்பவர்கள் வருணாச்சிரம தருமம் அழிவதற்கு எவ்வாறு சம்மதிப்பார்கள்?

'ஆத்ம ஞானிகள் கல்வியில் தேர்ந்தவனிடத்திலும், கல்வியில்லாத பிராமணனிடத்திலும். பசு, யானை, நாய் என்பவைகளிடத்திலும் நாயைத் தின்கிற சண்டாளனிடத்திலும், அறிவுடையவர்கள் ஆத்மாக்களின் சமத்துவத்தையே பார்ப்பார்கள்'

(பகவத்கீதை அத்தியாயம் 5. சுலோகம் 18)

என்று காணப்படும் கீதை வாக்கியத்தைக்கொண்டு பகவத்கீதையில் தீண்டாமைக்கு ஆதரவில்லை யென்று சொல்லக்கூடும். ஆனால் இதில் ஆத்மாவுக்குத்தான் சமத்துவம் கூறப்படுகிறதே ஒழிய உடம்புக்குச் சமத்துவம் கூறப்படவில்லை என்பதை அறிந்தால் தீண்டாமை விலக்குக்கு இடமில்லை என்பதை அறியலாம்.

பகவத்கீதையில் இந்த சுலோகத்தைக்காட்டி-லும் சமத்துவத்தை வற்புறுத்துவதற்கு வேறு சிறந்த சுலோகமில்லை. இதுவே இப்படியிருக்குமானால் மற்றவை எப்படியிருக்குமென்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

இனி தமிழர்களால் சமதர்ம நூல் என்று சொல்லப்படும் குறளில் தீண்டாமைக்கு இடமில்லை என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அதன் உண்மை நிலை என்ன என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

'பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா,
செய்தொழில் வேற்றுமையால்'

என்ற குறளைக்கொண்டு பிறப்பு வித்தியாசத்தைத் திருவள்ளுவர் ஒப்புக்கொள்ளவில்லை யென்றும் தொழில் வேற்றுமைபற்றியே உயர்வு தாழ்வு வித்தியாசம் உண்டென்றும் கூறுகின்றனர். இதுவும் தீண்டாமையை ஒருவழியில் ஒப்புக் கொள்ளுகின்றதென்பதே நமது அபிப்பிராயமாகும். உயர்வு தாழ்வு வித்தியாசத்தைக்கற்பிப்பது பிறப்பாயிருந்தாலும் சரி

அல்லது தொழிலாயிருந்தாலும் சரி, அவைமூலம்தான் தீண்டாமையும் உற்பத்தியாகின்றதென்பதையாரும் மறுக்கமுடியாது.

அல்லாமலும் திருவள்ளுவரும் வருணச்சிரம தர்மத்தை ஒப்புக் கொள்ளாமலில்லையென்றே சொல்லலாம்.

"மறப்பினும் ஒத்துக்கொளல்
ஆகும் பார்ப்பான்,
பிறப்பொழுக்கம்
குன்றக்கெடும்"

"ஆபயன் குன்றும் அறு
தொழிலோர் நூல்மறப்பர்,
காவலன் காவான் எனின்"

என்னும் குறள்பாடல்கள் வருணச்சிரம தருமத்தைப்போதிப்பனவேயாகும். "பார்ப்பான் வேதத்தை மறந்துவிட்டாலும் மறுபடியும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் அவனுடைய பிறப்பிற்குரிய ஒழுக்கத்தை விட்டுவிடுவானால் கெடுவான்'

'அரசன் சரியாக அரசாட்சி செய்யாவிட்டால் பசுக்களின் நன்மை குறையும் ஆறுவகைத் தொழிலையுடைய பார்ப்பனர்கள் வேதத்தை மறந்துவிடுவர்'

என்பனவே மேற்கூறிய குறள்களுக்கு அர்த்தம் என்பதைக் கொண்டு ஆராயும்போது திருவள்ளுவர் வருணச்சிரம தருமத்தை ஒப்புக்கெள்ளவில்லையென்றுவது, உயர்வு தாழ்வு வித்தியாசங்களை ஒப்புக்கொள்ளவில்லை யென்றுவது தீண்டாமைக்கு இடங்கொடுக்கவில்லையென்றுவது சொல்லமுடியுமா? 'தமிழ் வேதம்' 'சமதர்ம வேதம்' என்று சொல்லப்படும் குறளின் நிலைமையே இப்படி இருக்குமானால் மற்ற நூல்களின் நிலைமையைப்பற்றிக்கூறவும் வேண்டுமா?

இனி புராணக்கதைகளை எடுத்துக்கொண்டாலும் அவைகளும் தீண்டாமையை ஒழிக்க இடந்தரவில்லை என்பதைப்பற்றி நாம் அதிகமாக ஒன்றும் கூறவேண்டிய அவசியமில்லை. பெரிய புராணத்திலுள்ள நந்தனார் கதை ஒன்றே போதுமானதாகும். நடராஜா என்கிற பரமசிவன் என்னும் கடவுளிடத்தில் பக்தியுள்ளவராகிக் கோயிலுக்குள் செல்ல விரும்பிய தீண்டாதாராகிய நந்தனரை அந்த உடம்புடன் கோயிலுக்குள் வந்து தன்னை வணங்குவதற்கு அந்த நடராஜா என்கிற பரமசிவன் என்னும் கடவுளே சம்மதிக்காமல் நெருப்பில் மூழ்கி இறந்து பார்ப்பனசரீரத்தைப் பெற்றுக் கொண்டபின் கோயிலுக்குள் வரவேண்டுமென்று சொல்லி அவ்வாறே நந்தனரும் நெருப்பில் மூழ்கிப்பார்ப்பன உடம்பு பெற்றுக்கொண்டு கோயிலுக்குள் போனதாகத்தானே பெரிய புராணத்தில் சொல்லப்படுகின்றது? தீண்டாமை விலக்குக்கும் சமத்துவத்துக்கும் இடமிருப்பதாகச்சொல்லப்படும் பெரியபுராணம் என்பதே இவ்வளவு கொடுமையாக இருக்குமானால் மற்ற சின்ன புராணங்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

இனி, சங்கராச்சாரியார் என்பவர் தீண்டாமையை ஒழிக்கப்போதனை செய்தார் என்று கதை சொல்லுகிறார்கள் அவர் ஒருநாள் கங்கையில் ஸ்நானம்பண்ணிவிட்டு வரும்போது எதிரில் வந்த ஒரு தீண்டாதானைக்கண்டு விலகியதாகவும், உடனே அத்தீண்டாதான் சங்கரரை நோக்கி ஆத்மார்வில் என்ன வித்தியாசம்? என்று கேட்டதாகவும், பிறகு சங்கராச்சாரியார் ஆத்மசமத்துவத்தையறிந்து அவனைக்கட்டித் தழுவிக்கொண்டதாகவும், அவனுடைய ஆத்ம ஞானத்தைப் பாராட்டியதாகவும், அதற்காக சங்கராச்சாரியார் பஞ்சதசி என்ற நூலைச் செய்ததாகவும் அவருடைய கதையில் சொல்லப்படுகிறது. இந்தக்கதையும் ஆத்ம சமத்துவத்தைச் சொல்ல வந்ததே ஒழிய சரீர சமத்துவத்தைச்சொல்லவரவில்லையே! ஆகையால் இந்தக்கதையினால் பிறப்பு வித்தியாசமும், தீண்டாமையும் இருப்பதைக்காணலாம்.

மேற்கூறிய காரணங்களிலிருந்து தீண்டாமை நமது நாட்டில் தோன்றி நிலைத்திருப்பதற்கு இந்துமதமும், இந்துமத சாஸ்திரங்களும் அவைகளின் மூலம் உண்டான மூட நம்பிக்கைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களுமே என்பதை அறியலாம். இந்த உண்மையை மறைத்துவிட்டு 'இந்து மதத்தில் தீண்டாமைக்கு அனுமதியில்லை ஆகையால் இந்துமதத்தின்மேல் குறைகூறக்கூடாது' என்று சொல்லுவது இந்துமதத்தின்பேரில் வைத்துள்ள குருட்டு நம்பிக்கையும் இந்து மதம் அழிந்துபோனால் தங்களுடைய கௌரவத்துக்கும் சுய நலத்துக்கும் பங்கம் வரும் என்னும் எண்ணமுமே தவிர வேறல்ல என்றே நாம் கூறுவோம்.

திரு விஜயராகவாச்சாரியார் அவர்கள் "தீண்டாமை எப்படி வந்தது என்பதைப்பற்றி யோசிப்பதோ, அல்லது இந்து மதத்தின் பேரில் குறைகூறிக்கொண்டிருப்பதோ தீண்டாமையை விலக்குவதற்குரிய வழியாகாது" என்று கூறியிருப்பது எவ்வளவு மோசமான அபிப்பிராயம் என்று யோசித்துப்பாருங்கள்! ஒரு வியாதியைப் போக்க வேண்டுமானால் அது எவ்வாறு உண்டாயிற்றுஎன்பதை முதலில் தெரிந்து கொண்டு அது தோன்றுவதற்குக் காரணமாயிருந்த தீமையை ஒழிப்பதன் மூலமாக அன்றோ எப்பொழுதும் அந்த வியாதியை வரவொட்டாமல் தடுக்க முடியும்? இதை விட்டுவிட்டுத் தற்கால சாந்தியாகச் சில மருந்துகளைக் கொடுத்து அதன் தொந்தரவைத் தணித்து விட்டால் போதுமா? மறுபடியும் அடிக்கடி அவ்வியாதி உண்டாகித் துன்பப்படுத்தாதா? என்று யோசனை செய்து பாருங்கள்! இது போலவே தீண்டாமை உண்டானதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அக்காரணத்தை அடியோடு கல்லி யெறிந்து சுத்தப்படுத்தினால் அல்லவா தீண்டாமை அடியோடு அழியும்?

ஆதலால் தீண்டாமை எப்படி வந்தது என்பதைப்பற்றி யோசனை பண்ணிப்பார்த்தால் இந்து மதத்தின் மூலமாகத்தான் வந்தது என்னும் உண்மை யாருக்கும் விளங்காமற் போகாது. இவ்வுண்மையை யறிந்தவர்கள், தீண்டாமையை அடியோடு ஒழிக்க வேண்டுமானால் இந்து மதத்தையும் அடியோடு ஒழித்துத்தானாக வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வரக்கூடும். ஆகையால்தான் இந்து மதமே தங்கள் உயர்வுக்குக் காரணம்; அது அழிந்தால் தங்கள் மதிப்பும் போய்விடும் என்று முடிவு செய்து கொண்டு எந்தக் காரியங்களைச் செய்தாலும் அவைகளுடன் இந்து மதப்பிரசாரத்தையும் சேர்த்துக்கொண்டு வருகின்ற பார்ப்பனக் கூட்டத்தைச் சேர்ந்த திரு. விஜயராகவாச்சாரியாரவர்கள் "தீண்டாமை எப்படி வந்தது?" என்பதைப்பற்றி ஆராய வேண்டாமென்று கூறினர் என்பதில் என்ன சந்தேகம்?

ஆகவே இந்தக்கொடிய தீண்டாமையை அடியோடு ஒழிப்பது எப்படி என்பதைப்பற்றிய நமது அபிப்பிராயத்தைப் பலமுறை வெளியிட்டிருக்கிறோமாயினும் இச் சந்தர்ப்பத்திலும் சுருக்கமாகக் கூறிவிடுகின்றோம். தீண்டாமை எப்பொழுதும் நிலைத்திருந்தால் தான் இந்து மதம் நிலைத்திருக்கும் என்ற அபிப்பிராயமுடைய வைதீகக்கூட்டத்தை ஒதுக்கித்தள்ளி விட்டு மற்றவர்களில், தீண்டாமையை ஒழிப்பதற்கு யோசனை கூறுவோருடைய அபிப்பிராயத்தை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். "இந்து மதத்தில் தீண்டாமைக்கு ஆதரவில்லை. ஆகையால் இந்து மத தர்மங்களைக் கைப்பற்றுகிறவர்கள் எல்லோருக்கும் மத சம்பந்தமான சமூக சம்பந்தமான தடைகள் இருக்கக்கூடாது" என்று சொல்லுகின்றவர்கள் ஒரு சாரார். "இந்துமதத்தில் தீண்டாமைக்கு இடமிருக்கிறது; இதனாலேயே இந்து மதம் பாழடைந்து வருகிறது. ஆகையால், இக்கொடுமையை இந்து மதத்தை விட்டு ஒழித்துப் பரிசுத்தமாக்க வேண்டும்" என்று சொல்லுகின்றவர்கள் ஒரு சார் பார்.

ஆனால் நாமோ இந்த இரு சார் பினர்களின் அபிப்பிராயங்களையும் ஒப்புக்கொள்ளவில்லை. இவர்கள் அனைவரும், மதத்தையும், சாஸ்திரங்களையும் நம்பிக்கொண்டு, அவைகளை ஒழிக்க மனமில்லாமல் அவைகளின் மூலமாகவே தீண்டாமையை ஒழித்துச் சமத்துவத்தை உண்டாக்கவேண்டுமென்று விரும்புகின்றார்கள். இவர்களுடைய விருப்பம் எந்தக்காலத்திலும் நிறைவேறப்போவதில்லை யென்பதை, மதத்தையும், சாஸ்திரங்களையும் நம்பிக்கொண்டு தீண்டாமையை ஒழித்துச் சமதர்மத்தை உண்டாக்க முன்வந்த, ராமானுஜர், சைதன்யர், குரு, கோவிந்தசிங், குருநானக், தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர், ராமலிங்க சுவாமி போன்றவர்களின் முயற்சி என்ன ஆயிற்று என்று ஆலோசித்துப்பார்ப்பவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். இவர்களுடைய முயற்சியினால் ஒரு கடுகளவாவது தீண்டாமையைப் போக்க முடிந்ததா?

இவ்வாறு இவர்களுடைய முயற்சிகளும், உபதேசங்களும் பலன்தராமற் போனதற்குக்காரணம், அவர்கள் தங்கள் முயற்சிகளுக்கும், உபதேசங்களுக்கும் மதங்களையும், சாஸ்திரங்களையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு, அவைகளுக்குத் தத்துவார்த்தங்கள் கூறித் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவு தேடியதேயாகும் என்பதில் என்ன சந்தேகம்?

ஆகையால், மதமும், சாஸ்திரங்களும் ஒழிந்தாலல்லாமல் தீண்டாமை ஒழியப் போவதில்லை என்பதே நமது முடிவான அபிப்பிராயமாகும். இந்த அபிப்பிராயத்தினால் தான், சுயமரியாதை இயக்கம், மதங்களையும், சாஸ்திரங்களையும், அதிலும், அவசரமாகவும் அவசியமாகவும் இந்து மதத்தையும், இந்துமத சாஸ்திரங்களையும் அடியோடு ஒழிக்க வேண்டுமென

க்கூறியும், அந்த வேலையைச்செய்தும் வருகிறது.

உயர்ந்த சாதியினர் என்றுசொலிக் கொண்டிருப்பவர்களான-இந்துமதத்திலும், இந்து மதசாஸ்திரங்களிலும் நம்பிக்கையும், குருட்டுப் பழக்க வழக்கங்களும் உடைய இந்துக்களிடம் உள்ள, மத நம்பிக்கையையும், சாஸ்திர நம்பிக்கையையும் ஒழிப்பதன் மூலமே தீண்டாதவர்கள் சமத்துவம் பெற முடியும் இந்து மதத்தை வைத்துக்கொண்டு ஒரு பொழுதும் சமத்துவம் பெற முடியாது. ஆகையால் இந்து மதம் ஒழியும் வரையிலும், தீண்டாமைக்கொடுமையைச்சகித்துக்கொண்டு இந்து மதத்துடன் போர் புரிந்து கொண்டிருக்க முடியாதவர்கள் இந்து மதத்தையே அடியோடு விட்டு விட்டுத் தங்களுக்குச் சமத்துவம் அளிக்கின்ற வேறு மதத்தில் சேருவதும் தவறுகாணென்றும் சொல்லுகின்றோம். அவசரமாகச் சமத்துவம் பெற விரும்புகிறவர்களுக்கு இதைத்தவிர வேறு மார்க்கமில்லை என்பதே நமது அபிப்பிராயமாகும்.

திரு. ஆர். கே. சண்முகம்.

நமது இயக்கத் தலைவர்களில் ஒருவராகிய திரு. ஆர். கே. சண்முகம் அவர்கள் ஜினிவாவில் நடைபெறும் அகில தேச தொழிலாளர் மகாநாட்டிற்கு முதலாளிகளின் பிரதிநிதியாக இப்பொழுது மூன்றுதடவையாகச் செல்கின்றார். திரு. சண்முகம் அவர்கள் முதலாளிகளின் சார்பான பிரதிநிதியாகவிருந்தாலும், சமதர்மவாதியென்பதையும், சமதர்மத்திற்காக அந்தரங்க சுத்தியுடன் பாடுபடும் உண்மையான குணமுடையவர் என்பதையும், அவர் நமது சுயமரியாதை இயக்கவளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டிருப்பது ஒன்றைக்கொண்டே அறியலாம். அவர், ஜினிவா மகாநாடு முடிந்தவுடன் தமது சகாவான திரு. திவான் சமன்லால் அவர்களுடன் அமெரிக்கா முதலிய இடங்களுக்கும் சென்று திரும்புவார். சொல்வன்மையும், செயல்வன்மையும் ஒருங்கேயமைந்த நமது திரு. சண்முகம் அவர்கள் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும், சமரசமும், நன்மையும் உண்டாகும் வகையில் உழைத்து வெற்றி பெற்று வருவார் என்று எதிர்பார்க்கிறோம்.

நம்பூதிரி மசோதா.

கோச்சி சட்டசபையில் நம்பூதிரி மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிக் கொச்சி சட்ட சபையில் நடை பெற்ற விவாதத்தை முதல் பக்கத்தில் காணலாம். நம்பூதிரி சமூகம் மிக்க வைதீகப்பற்றுக்கொண்ட ஒரு சமூகம் 150 வருஷம் பிரிட்டிஷ் ஆட்சியினால் மேலோட்டு நாகரீகமும், மேலோட்டுக் கல்வியும் எல்லா சமூகங்களிலும் மிக விரைவாகப் பரவிவரும் இக்காலத்தும் நம்பூதிரிகள் பழைய க்றுப்பர்களாகவே இருந்து வருகிறார்கள். "ஆங்கிலம் மிலேச்ச பாஷை அதைப் படிப்பது குற்றம்; நாழி யுண்டு, நான்கு முழ முடுத்தி உயிர் வாழவேண்டும். குடும்பத் தலைவரே சுயஜாதியில் விவாகம் செய்யவேண்டும். இளையோர் நாயர் பெண்களை மணந்து காம வெறியையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். இளையாருக்குக் குடும்ப வாழ்க்கை இல்லை, புருஷர் பலதார மணம் செய்யலாம். பெண்கள் பொன்னுபரங்கள் அணிதல் கூடாது; பட்டாடைகளோ ஜரிகைப் புடவைகளோ கட்டக்கூடாது. மார்பை மறைக்கக்கூடாது;; என்பனவே நம்பூதிரிகளின் குலாசாரங்கள். மலையாளத்தில் நம்பூதிரிகள் உயர்ந்த ஜாதியாராக மதிக்கப்பட்டாலும், மலையாளததில் தீண்டாதாராய் மதிக்கப்படும் புலையர், பறையர் பெண்கள் குடும்ப வாழ்வு நம்பூதிரிப் பெண்கள் குடும்ப வாழ்வைவிட எத்தனையோ மடங்கு உயர்வாக இருக்கிறது நம்பூதிரி மாதர் பிரதிநிதி ஸ்ரீமதி பார்வதி நெம்மினி மங்கலமும் கொச்சி சட்ட சபையில் இதைப்பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். மலையாளததிலே நம்பூதிரி ஜென்மிகள் (ஜமீன்தார்கள்) பலர் இருந்துவருகிறார்கள். கொல்லங்கோடு ராஜாவும் நம்பூதிரி ஜென்மிகளில் ஒருவரே. ஜமீன் சொத்துக்கள் அழியாதிருக்கும்பொருட்டு ஒரு விநோத விவாக வழக்கத்தைப் பண்டைய நம்பூதிரித் தலைவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது நம்பூதிரிக் குடும்பங்களில் குடும்பத் தலைவரே சுயஜாதிப் பெண்களை விவாகம் செய்துகொள்ளவேண்டும். இளைய மெம்பர்களுக்கு சட்டப்படி சுயஜாதி விவாகம் கிடையாது. குடும்பச் சொத்திலும் அவர்களுக்கு உரிமைகிடையாது. நாயர்ப் பெண்களை சம்பந்தக் கல்யாணம் செய்து கொள்ளலாம். நாயர் ரெகுலேஷன் நிறைவேறும்வரை இந்த சம்பந்தக் கலியாணம் வைப்பாட்டி வழக்காகவே இருந்து வந்தது. ரெகுலேஷன் நிறைவேறிய துமுதல் சம்பந்தக் கலியாணம் சட்ட மதிப்பு பெற்றது. மனைவிக்கும், குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் அளிக்க நம்பூதிரிக் கனவன் கடமைப்பட்டவன். ஆனால் நம்பூதிரிக் கணவன் குடும்பச் சொத்திலும் நாயர் சந்ததிகளுக்கு வாரிசுரிமை வழங்கப்பட்டது. இதனால் நாயர் மனைவியும், சந்ததிகளும் நலம் பெற்றனராயினும் நம்பூதிரிக் கணவன்மார்களுக்கு எத்தகைய இலாபமும் உண்டாகவில்லை. நம்பூதிரித் தந்தையை நாயர் புத்திரன் காப்பாற்றக் கட்டுப்படவில்லை. எனவே நம்பூதிரிகள் நிலைமை மிக மோசமாகிவிட்டது. சமூகத்துக்கு நேரும் ஆபத்துகளை முதன் முதல் அறிவது சமூக இளைஞர்களே எனவே சமூக சீர்திருத்தவிஷயங்களில் எல்லா சமூகங்களிலும் இளைஞர்களே முதன் முதல் கவனம் செலுத்துகிறார்கள். அந்த உலக வழக்குப்படி நம்பூதிரி இளைஞர்கள் "யுவஜன சங்கம்" என ஒரு சங்கம் கண்டு சமூக சீர்திருத்தம் செய்ய முயன்று வருகிறார்கள். எத்தனையோ இளைஞர்கள் சுயஜாதிப்பெண்ணைத்துணிந்து விவாகம் செய்திருக்கிறார்கள். அவர்களை ஜாதிப்ருஷ்டம் செய்வது வழக்கமாயிருந்தும் இளைஞர்கள் சுயஜாதிமணம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. ஆனால் இளைஞர்கள் சுயஜாதிமணம் சட்ட பூர்வமாக ஒப்புக்கொள்ளப் படாவிட்டால் பிற்கால சந்ததிகள் அதோகதியாகிவிடுவர். அன்றியும் இளைஞர்களுக்கு சுயஜாதி மனம் மறுக்கப்பட்டிருப்பதினால் நம்பூதிரிப்பெண்கள் நிலை மிகப்பரிதாபகரமாக இருந்து வருகிறது. அநேக பெண்கள் தம் வாழ்நாள் முழுமையும் கன்னிகளாகவே இருந்து உயிர்துறக்கவேண்டிய வர்களாயிருக்கிறார்கள். பணக்காரப் பெண்களை பணத்துக்கு ஆசைப்பட்டு நம்பூதிரி குடும்பத் தலைவர்கள் இரண்டாவது மூன்றுவது நான்காவது மனைவிகளாக மணந்துகொள்ளுகிறார்கள். ஏழைப்பெண்களுக்குத் தான் கதிமோக்ஷமில்லை. இதனால் நம்பூதிரிப்பெண்களில் பெரும்பாலார் காதல்இன்பம் அனுபவிக்க வசதியற்றவர்கள் ஆகியிருக்கிறார்கள் 'ஒன்று நாங்கள் கிழவர்களுக்கு மூன்றுவது மனைவியாகவோ, நான்காவது மனைவியாகவோ வாழ்க்கைப்படவேண்டும், அல்லது நித்திய கன்னிகைகளாய் வாழ் நாட்களைப்போக்கவேண்டும்' என்று ஸ்ரீமதி பார்வதி நெம்மினி மங்கலம் கொச் சட்டசபையில் கூறியவார்த்தைகள் நம்பூதிரி மாதர்களின் தற்கால நிலைமையை நன்கு விளக்குகின்றன. ஆகவே இந்த அநாசார வழக்கங்கள் ஒழிக்கப்பட்டாலன்றி நம்பூதிரி சமூகம் முன்னேற்றமடையப்போவதில்லை. இவ்வுண்மையை நம்பூதிரி இளைஞர்களும், விசால மனப்போக்குடைய மூத்தோர்களும் அறிந்தே இருக்கிறார்கள். திரு. பி. எஸ். கேசவன் நம்பூதிரி மசோதாவைப் பிரேரணை செய்து பேசுகையில் நம்பூதிரிகளில் பெரும் பாலார் அம் மசோதாவை ஆதரிப்பதாகவும், புராதனக்குடும்ப காரணவர்களும் சீர்திருத்தத்தை விரும்புவதாகவும் இந்த மசோதாவை உருப்படுத்தும் விஷயத்தில் பிரபல குடும்பத் தலைவரான தைக்காடு மூஸ் உதவி புரிந்திருப்பதாகவும் தெரிவித்தார். எனவே வைதீகப்பற்றுடைய நம்பூதிரிகளுக்குள்ளும் சீர்திருத்த உணர்ச்சி அதி தீவிரமாகப்பரவி வருவது நன்குவிளங்கும். நம்பூதிரிகளின் முன்னேற்றத்துக்கும், மலையாள நாட்டின் வளர்ச்சிக்கும் இந்த மசோதா நிறைவேறித் தீரவேண்டியது அவசியமாயினும் இது சட்டமாகிவிடுமென்று எளிதில் நம்பிவிடுவதற்கில்லை. இந்திய சட்டசபைகளில் நிறைவேறும் சட்டங்கள் வைஸ்ராய் அனுமதிபெறவேண்டும் என்று விதியிருப்பதுபோல் சுதேச சமஸ்தானங்களில் நிறைவேறும் சட்டங்கள் சமஸ்தான மன்னர்கள் அனுமதிபெற வேண்டுமென்றும் விதி இருந்து வருகிறது. கொச்சி ராஜாக்களோ மிக வைதீகப்பற்றுடையவர்கள். பார்ப்பனீயத்தில் பிறந்து, பார்ப்பனீயத்தில் இயங்கி பார்ப்பனீயத்தில் ஒடுங்குகிறவர்கள். ஆகவே அவர்கள் சமூகச் சீர்திருத்த மசோதாக்களை எளிதில் அனுமதிக்கமாட்டார்கள். கொச்சி முதல் சட்டசபைக்கூட்டத்தில் ஒரு நம்பூதிரி சீர்திருத்த மசோதா கொண்டுவரபபட்டு நிறைவேறியது. கொச்சி மகாராஜா அதற்கு அனுமதியளிக்காததினால் அது இறந்துபோயிற்று. இரண்டாவது சட்டசபையில் ஸ்ரீமதி கௌரி பவித்திரன் என்ற ஈழவ மாதர் மெம்பர் ஒரு மசோதா கொண்டுவந்தார். இரண்டாவது சட்டசபை காலத்தில் அதைச்சட்டமாக நிறைவேற்றமுடியவில்லை. இப்பொழுதும் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு நம்பூதிரி மாதே இந்த மசோதாவை சட்ட சபையில் ஆதரித்துப்பேசியிருப்பதுங் குறிப்பிடத்தக்க விஷயமாகும். காலம் முன்னேறிச்செல்வதை கொச்சி மகாராஜா நன்கு கவனிக்கவேண்டுகிறோம். அயல் சமஸ்தானமான திருவிதாங்கூர் பல அநாசாரங்களை ஒழித்து நாகரீக உலகத்தில் மதிப்புப் பெற்று வருவதைக்கொச்சி மகாராஜா உணர்ந்து இந்த மசோதா சட்ட சபையில் நிறைவேறினால் அதற்கு உடனே தாராளமாக அனுமதியளித்துப்புகழ்பெறுவார் என்று நம்புகிறோம்.

"சண்டமாருதம்"

திருமண அறிக்கை.

"தமிழன் ஆசிரியரும், தங்கவயல் பௌத்த சங்கங்களின் அக்கிராசனருமாகிய திரு. ஜி. அப்பாதுரையார் அவர்களின் திருமகள் அன்னபூரணி அம்மாளுக்கும் கெல்லை அம்பாசமுத்திர நிவாசர் உயர்திரு எஸ். ஆர். அழகப்பா அவர்களின் திருமகன் இரத்தினசபாபதி அவர்களுக்கும் தங்கவயல் சாம்பியன் ரீப்சில் 10—4—32 ஞாயிறு ஞான்று சமதர்ம நெறி முறைக்கிணங்க திருமணம் நடைபெறும் என ஒரு திருபர் எழுகிறார்.

கே. எம். பாலசுப்ரமணியம்

நமது இயக்கப் பேரன்பர் தோழர் கே.எம்-பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல். அவர்கள் சில தினங்களாக திருச்சியில் கடுமையான வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்து, இப்பொழுது டாக்டர் உதவியினால் குணம் பெற்றுவருகிறார்.

தீண்டாதாருக்கு ஒருபொழுதும் ஓட்டுக்கொடோம்.

லோதியன் கமிட்டியார் பம்பாய் மாகாணத்தில் உள்ள பால்கம் என்னும் கிராமத்திற்குப் போயிருந்த போது அக்கிராமத்தின் வயது சென்ற பெரிய கிழவர் ஒருவர் லார்டு லோதியன் அவர்களால் கேடகப்பட்ட சில கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

அக்கிழவனுருக்கு ஓட்டுரிமை வேண்டுமா என்று கேட்கப்பட்டபோது 'என்க்கு வேண்டாம்' என்று அந்தக் கிழவர் தலையை ஆட்டிக்கொண்டே பதில் சொன்னார். 'என்னுடைய இந்த தள்ளாத வயதில் அந்த தொல்லைகள் எல்லாம் எனக்கு வேண்டாம'

'ஒரு தீண்டப்படாதோர் தேர்தலுக்கு நின்றால் இக்கிராமத்தார்கள் அவருக்கு ஓட்டுப்போடுவரர்களா ?' என்று லார்டு லோதியன் கிழவரை பிறகு கேட்டார்.

கிழவர் மிகுந்த பரபரப்புடன் அழுத்தமான குரலில் 'ஒருபொழுதும் இல்லை' என்று பதில்சொன்னார்.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

தே உண்டாக்கியிருக்கிறான் என்று அந்த நந்தவனத்திலுள்ள எறும்புகள் நினைத்துக்கொள்வதாயிருந்தால், அவைகளினுடைய அறிவைப்பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள். ஆனால், மதங்கள் சொல்கிறபடி பார்த்தால், மிக அற்ப ஜந்துவுக்கும் மனிதனுக்கும் எத்தனைய சம்மந்தம் இருக்கிறதோ, அதைவிட மிகக் குறைவான சம்மந்தமே மனுதனுக்கும் கடவுளுக்கும் இருக்கமுடியும், ஆகையினால், மதக் கொள்கைகளின்படி பார்த்தாலுங்கூட; கடவுளைப்பற்றியே மதங்கள் கூறுகிறவரையிலும் மதங்கள் என்பவைகள் எல்லாம் ஆபாசங்களும், பொய்களும், முரண்களும் கலந்த ஒரு பெருங்களஞ்சியம் என்றே சொல்லவேண்டும்.

(தொடரும்)

கணவனைவிட்டுச்செல்ல ஸ்திரீகளுக்குச் சுதந்திரம்.

ஜஸ்டிஸ் மெக்கார்டியன் தீர்ப்பு.

"ஹெலன் ஆப்டிராய்" என்ற பெயருடன் விசாரிக்கப்பட்டுவரும் வழக்கில் ஜஸ்டிஸ் மெக்கார்டி தீர்ப்புக் கூறுகையில் கூறியதாவது:— விவாகமான ஒரு ஸ்திரீ இஷ்டப்படும்பொழுது தமது கணவன் வீட்டை விட்டுச் செல்ல உரிமை உண்டென்ற சட்டத்திலிருந்து தெளிவாக எற்படுகிறது. அந்த ஸ்திரீயைத் தடுக்கச் சட்டத்திற்கதிகாரமில்லை.

கேம்பிரிட்ஜ் டாக்டரான சார்லஸ் ஹிர்லியென்பவர் ஜான்பிறேஸ்யென்பவரின் மனைவியை இழுதுதச் சென்றதாக நஷ்ட ஈடு கோரி ஹிர்லிமீது ஜான்பிறேஸ் பிராது செய்திருந்தார். ஜட்ஜ் டாக்டர் ஹிர்லி சார்பாகத் தீர்ப்புக் கூறினார்.

இதில் தாம் ஒழுக்கத்தைக் கவனிப்பதற்கில்லை யென்றும், தற்கால சட்டங்களின் பயனாக ஸ்திரீகளின் நிலைமையில் புரட்சித் தன்மையான மாறுதல் ஏற்பட்டிருப்பதாகவும் ஜஸ்டிஸ் மக்கார்டி தீர்ப்பில் கூறினார்.

(சு—மி.)

ப்ளுமவுண்டன் பேட்மிண்டன் பந்தய விளையாட்டு.

ஈரோடு ப்ளுமவுண்டன் எலக்ட்ரிக் டிரேடிங்கம்பெனியின் சார்பில் 1932 ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் பேட்மிண்டன் டபுள்ஸ் பந்தய விளையாட்டு ஒன்று நடைபெறும். இதற்கு நமது மாகாணமுழுவதுமிருந்து வரலாம். டீம் 1-க்கு 2-ரூபாய் பிரவேசகட்டணம் அனுப்பவேண்டும். 7-4-32க்குள் விண்ணப்பம் அனுப்பவேண்டும். "ஈ. வி. சுப்பண்ணன் ப்ளுமவுண்டன் எல்க்ட்ரிக் டிரேடிங்கம்பெனி ஈரோடு என்ற விலாசத்திற்கு இதுசம்பந்தமாக விஷயந்தெரிந்து கொள்ளவேண்டுமென்வார் எழுதவும்.

புது பிராமணரல்லாதார்.

புதுநகர பிராமணரல்லாத வியாபாரிகள் ஒருகூட்டம் கூடினார்கள். அதற்குசர்தார் எஸ். பி. தோரேட் தலைமைவகித்தார்.

மதியலையும் சட்டமறுப்பையும் கண்டித்து ஒருதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது சட்டமறுப்பையும், மதியலும் வட்டமேஜை மகாநாட்டின் நடவடிக்கைகளை அடியோடு கெடுத்துவிடுவதுடன் அரசியல் சீர்திருத்தங்களுக்கும் சுயராஜ்யத்திற்கும் தடையாகஇருக்கின்றதுஎன்றும்பேசப்பட்டது.

சு-மா

திருப்பூர் டி. மு. கோட்டு.

1925-ஹ O. S. No 1955.
1931-ஹ E. A. No 2290.

பழ. வீர. சுப்பிரமணியஞ் செட்டியார்—வி.வாதி.

கோயமுத்தூர் தாலுகா பூலமேடு கிராமம் உடையாம்பாளையம் முத்து ராக்கியாக்கவுண்டன்—7-ம் பிரதிவாதி.

ஷெ 7-ம் பிரதிவாதிக்கு, ஷெ நெம்பரில் வாதியின் மேமேடோவர் அங்கீகாரம்செய்து கொள்ளவேணுமாயும், 1ம் பிரதிவாதிக்கு உம்மை வர்சாக சேர்த்துக்கொள்ளவேணுமாயும், ஷெ டிக்ரியை நிறைவேறற வேணுமாயும், அடமான சொத்துக்களை ஏலம் போடவேணுமாயும் வி. வாதி மனுக்கொடுத்து 1932-ஹ மார்ச்சு மாதம் 29-தேதி இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷெ தேதியில் நீர் கேரிலாவது வக்கீல் முலமாகவாவது ஆஜராகத் தவரினால் எக்ஸ்பார்ட்டியாக உத்திரவாகிவிடும்.

எம். கே. கோவிந்தராஜுலு செட்டியார்,
வாதியின் அட்வகேட்.

திருப்பூர் 21-3-32.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "சுமத் எண்ணையே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்மெனய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இலம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Pallabha & Sons,
Pilibhit R. K. Ry., U. P.

பெற்றோர்களே! கவனியுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்குகுலைக் கட்டி வயிற்றுக்கட்டி என்ற அபாயத்தினின்று நிச்சயமாய் குணப்படுத்தும் கைகண்ட மருந்து தெரியுமா? பிரசித்தி பெற்ற விஜய நகரம் டாக்டர் ஜம்மி வியாசராவ் அவர்களிடமும்

(விஜயநகரம் B. N. Ry.)

M. கல்யாணசுந்திரம்,
74 பட்டமங்கல தெரு மாயவரம்.

ஏஜண்டு & ஆர்கனைசர் என்ற இடத்திலும் கிடைக்கும்.

தமிழ் நாடெங்கும் ஏஜண்டு தேவை. ஆர்கனைசருக்கு உடனே எழுதவும்.

நோட்டீஸ்.
திருப்பூர் டி. மு. கோர்ட்டில்

1931ஹ அசல் நெம்பர் 989.

சுப்பு செட்டியார்—வாதி.

இப்போது ஈரோடு கச்சேரி வீதியில் சிவனடியார் பிள்ளை ஓட்டலிலிருக்கும் சிதம்பரம் பிள்ளை மகன் அருணாசலம் பிள்ளை—6ம் பிரதிவாதி.

ஷெ நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் மேமேடோவர் அடமானப்பத்திரப்படி ரூ. 1500-ம் பின் வட்டி கோர்ட்டு செலவு கிடைக்க வேணுமாய் தாவா செய்து ஷெ தாவா நாளது எப்ரல் மாதம் 8 தேதி வாய்தா போட்டிருக்கிறது. அன்று 6ம் பிரதிவாதி பகல் 11 மணிக்கு ஆஜராகத் தவறினால் ஒரு கட்சியாகத் தீர்மானிக்கப்படும் என்கிற சங்கதியை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஜி. ஆர். ஜகதீசசாஸ்திரியார்,
24-3-32. வாதிவக்கீல்.

தாது புஷ்டிக்கு
"கெய்ரோடைன்"
சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ண்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனாமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

சும்மாவா சொன்னார்கள்?

(ஸ்க்குரூ லூஸ்)

சொன்னால் மாத்திரம் கோபித்துக்கொள்ளுகிறீர்கள். உள்ளதை நன்றாய் யோசித்துப்பார்ப்பதில்லை. முன் கோபக்காரர்க்குப் புத்தி மட்டு. ஆகையால் சொல்வதை முழுவதையும் காதுக்குள் நுழையவிட்டுக் கொள்ளுங்கள்! பிறகு யோசித்துப் பாருங்கள். உங்கள் மனத்திற்குப் பிடிக்காத வார்த்தைகள் காதுக்குள் நுழைவதால் ஒன்றும் முழுகிப் போய்விடாது. அந்த வார்த்தைகள் பாம்பாய்ப் பிடுங்கி விடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பார்ப்பனர் எந்தக் கூட்டத்தில் நுழைந்தாலும் தங்கள் பெருமைக்காகவே பாடுபடுவார்கள்; எந்தக் காரியத்தைச் செய்தாலும், அது அவர்களுடைய நன்மைக்கானதாகவே யிருக்கும்; இதில் கடுகளவும் சந்தேகம் வேண்டாம். முட்டி புகும் பார்ப்பார், வன்னெஞ்சப் பார்ப்பார் என்றெல்லாம் சும்மாவா சொன்னார்கள்?

இன்றுள்ள பள்ளிக்கூடங்களை எடுத்துக் கொள்ளுங்கள்; வேற்றுமையை உண்டாக்குகிறவர்கள் யார்? மூட நம்பிக்கையைப் போதிக்கின்றவர்கள் யார்? மத விஷயங்களை வற்புறுத்துகிறவர்கள் யார்? பார்ப்பன உபாத்தியாயர்கள் என்பதை யார் தடை சொல்ல முடியும்?

பார்ப்பனர்கள் எல்லோருமே மத பக்தி யுடையவர்கள் போல நடிக்கின்றனர். மதத்தைக் காப்பாற்ற வேண்டுமெனப் பேசுகின்றனர். என் மதத்தின்மேல் இவர்களுக்கு இவ்வளவு கவலை? என்றுதான் நான் கேட்கிறேன். மதத்தின்மேல் கவலைக்குக் காரணம், சாதி அழியாமலிருக்கவேண்டும் என்பதுதான், சாதி அழியாமலிருந்தால்தான் பார்ப்பனர்கள் செல்வாக்குப் பெற முடியும். எப்படி நமக்குள் பல சாதிகள் இருக்கும் காரணத்தால் வெள்ளைக்காரர்கள் நமது தலைமேல் சட்டமாக உட்கார்ந்துகொண்டிருக்கிறார்களோ இது போலவே வருணச்சிரமமும் மதமும் அழியாமலிருந்தால் பார்ப்பனர்கள் நம்மை ஏமாற்றிக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருக்கலாம்.

சென்னை சட்ட சபையில் கல்வி மான்யத்தைப்பற்றி விவாதம் நடந்த போது, திரு, பார்த்தசாரதி அய்யங்கார், பள்ளிக்கூடங்களில் புராதன இலக்கியங்களையும், கலைகளையும் போதிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதை மறுத்துக் கூறினர் எவருமில்லை.

புராதன இலக்கியங்களும். கலைகளும் எதற்குப் பயன் என்று கேட்கிறேன், இன்று மக்கள் படும் கஷ்டத்தைப் போக்க ஏதாவது வழி கூறுகின்றதா? சுயராஜ்யம் பெற ஏதாவது உபதேசம் பண்ணுகிறதா? ஒன்றுமில்லை. அவனும் இவனும் அடித்துக்கொண்டான், அவன் பெண்சாதியை இவன் தூக்கிக கொண்டு போனான். அவனை இவன் ஏமாற்றினான். அவன் கழுதைக்குப் பிறந்தான்; இவன் குதிரைக்குப் பிறந்தான். அவன் பிச்சை வாங்கினான். பிராமணன் தொழில் இது. க்ஷத்திரன் தொழில் இது, என்ற ஆபாச விஷயங்களையும், பிரிவினைக்கான எண்ணங்களையும் தானே போதிக்கின்றன? இந்தப் போதனை எதற்காக என்று நான் கேட்கிறேன்.

நான் சட்ட சபையில் ஒரு மெம்பராக இருந்தால், திரு. பார்த்தசாரதி அய்யங்காருக்குச் சரியான பதில் சொல்லியிருப்பேன். பழைய இலக்கியங்கள், கலைகள் இவைகளிலுள்ள வண்டவாளங்களை யெல்லாம் எடுத்து விரித்திருப்பேன். வைதீகர் கூட இதைக் கேட்டுத் தலை நாணும்படி செய்திருப்பேன்,

ஆனால் நான் எப்படிச் சட்ட சபைக்குப் போக முடியும். நான் ஸ்க்குரூஉலூஸ் மாத்திரம் அல்ல. வெறும் அன்னக்காவடி. ஆகையால் என்னை ஒருநாளும் சட்ட சபைக்குள் திணிக்கமாட்டார்கள். புத்தி எப்படி இருந்தாலும், ஆள் அங்கமாயிருந்தால் போதும்; பணம் இருந்தால் போதும்; அவர்களைத்தான் நீங்கள் சட்ட சபைக்கு அனுப்புவீர்கள்; அவர்கள் இப்படித்தான் பேசுவார்கள்.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தையும் கொஞ்சம் கிளப்பிவிடுகிறேன். சென்னையில் உள்ள இந்திய வைத்தியக் கல்லூரி சம்மந்தமாக நமது நண்பர் தேசியத் துரோகி என்பவர் முன்னொரு கட்டுரை குடி அரசில் எழுதியிருந்தார், அது உங்களில் சிலருக்கு ஞாபகம் இருக்கலாம். அதில் சென்னையில் உள்ள பார்ப்பனச் சுக்கு மிளகு திப்பிலிகள் எல்லாம் ஒன்று கூடிக்கொண்டு சில தீர்மானங்கள் செய்ததைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது. அதாவது, இந்திய வைத்தியக் கலாசாலையில் ஆயுர்வேத வைத்தியத்தை மாத்திரமே ஆகரிக்க வேண்டும் என்றும் மற்ற சித்த வைத்தியம், யூனி வைத்தியம் முதலியவைகளையும் ஆதரிப்பதனால், அயுர்வேத வைத்தியத்திற்கு மதிப்புக் குறைந்துவிடுகிறதென்றும் தீர்மானித்தார்கள். அதன் பிறகு இந்திய வைத்தியக் கல்லூரியில், அடிதடி சண்டைகளும் நடந்துவிட்டது.

அதாவது, ஆயுள்வேத வைத்திய மாணவர்களுக்கும் சித்த வைத்திய மாணவர்களுக்கும் அடிதடி நடந்தாம். இதைப்பற்றி சென்னை சட்ட சபையிலும் பிரஸ்தாபம் வந்துவிட்டது. இது பார்ப்பன பார்ப்பனரல்லாதார் சண்டைதான், ஆயுள்வேத வைத்தியம் படிப்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகத்தான் இருப்பார்கள். சித்த வைத்தியம் படிப்பவர்கள் பெருப்பாலும் பார்ப்பனரல்லாதார்களாகத்தான் இருப்பார்கள், இந்தச் சண்டைக்குக் காரணம் என்னவென்று நமக்குத் தெரியாது. ஆனால், முன்பு பார்ப்பனச் சுக்கு மிளகுகள் செய்த தீர்மானமும் ஒரு காரணமாகும் என்றுதான் நாம் ஊகிக்கிறோம்.

ஆனால் பார்ப்பனச் சுக்கு மிளகுகளுக்கும் பார்ப்பனரல்லாத வீரம் பூரம்களுக்கும் சண்டை யுண்டானால் வெற்றி வீரம் பூரம்களுக்குத்தான் என்பது நிச்சயம். சுக்கு மிளகு திப்பிலிகளின் காரசாரத்தை விட வீரம் பூரம்களின் காரசாரம் மிக அதிகமானது என்பதை ஞாபகத்தில் வைக்கட்டும்.

இவ்வாறு வைத்தியத்தில் சண்டை வரக் காரணம் என்ன? பார்ப்பனீயம் அல்லவா? என்று யோசனை செய்து பாருங்கள்.

இன்னொரு சங்கதியையும் கேளுங்கள்! கும்பகோணத்தில் உள்ள ம. வீ. ராமானுஜாச்சாரியார் என்னும் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் ஒரு அபூர்வமான காரியத்தைக் செய்து முடித்தார். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததைப்போல சமஸ்கிருதத்தில் உள்ள பாரதத்தைத் தமிழில் வெளியிட்டார். இந்தக் காரியத்தால் எதற்கு என்ன பயன்? பாரதம் தமிழில் இல்லையா? வில்லிப்புத்தூரார் பாரதம், அரங்கநாத கவிராயர் பாரதம், நல்லா பிள்ளை பாரதம், பெருந்தேவனார் பாரதம், பாரதக் கீர்த்தனை எனப் பல இருக்கின்றன. இவையெல்லாம் பாடல்கள். வசனத்தில் பல உண்டு. பழய குடுக்கைகள், கிராமாந்தரங்களில், வேலையில்லாத காலங்களில், திண்ணைகளில் உட்கார்ந்து பாரதம் படிப்பார்கள், அதற்கான வசனநடையில் முறத்தைப்போல பாரதம் முழுதும் நான்கு ஐந்து புஸ்தகங்களாக இருக்கின்றன. இவற்றைவிட இந்தப் பாரதம் என்ன செய்யப் போகிறது.

பாரதத்தால் நமது நாட்டுக்கு என்ன பயன்? அண்ணன் தம்பிகள் சண்டைகளை அதிகப்படுத்தவா? அல்லது பெண் மக்கள், குந்திதேவியைப் போல கொண்ட கணவனை வைத்துவிட்டு, ஊரானுக்கெல்லாம் பிள்ளை பெறவா? அல்லது கிருஷ்ணனைப் போல ஆண்மக்கள் ஊரிலுள்ள பெண்களோடெல்லாம் விபசாரம் பண்ணவா? இதைத் தவிர பாரதக் கதை என்ன போதிக்கிறது? நீதிகளையெல்லாம் எடுத்துக்கொண்டால் அவைகளெல்லாம் வருணச் சிரம தரும நீதிகள்தானே. இவைகள் இந்தக் காலத்தில் யாருக்கு வேண்டும்?

ஆகையால் இந்தக் காரியத்தைச் செய்து முடித்ததற்காக திரு. ஆச்சாரியாரைப் பார்ப்பனர்கள் பாராட்டுகிறார்கள். அவருக்காகச் சென்ற வருஷம் சென்னை யூனிவர்சிட்டியிலிருந்து 2000 ரூபாய் பணமும் கொடுத்தார்களாம். இப்பொழுது கும்பகோணத்தில் உள்ள பார்ப்பனர்கள் எல்லாக் கட்சியினரின் பெயராலும் ஆச்சாரியாரை உபசரித்தார்கள். அவருக்குப் பணமுடிப்பு அளிக்க ஒரு கமிட்டியும் நியமித்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் எதற்காக பார்ப்பன மதத்தைப் பிரசாரம் பண்ணத்தானே.

இந்தமாதிரியே எந்தக்காரியத்தை எடுத்துக்கொண்டாலும் பார்ப்பனர்களின் சங்கதி தன்னலங்கருதியதாகத்தான் இருக்கும். உச்சிக் குடுமிகளையும், மடிசஞ்சிகளையும் சாதாரணமாக நினைப்பதற்கில்லை. அவைகளின் அட்டகாசம் அனந்தம்.

நம்முடைய சோணகிரிகளோ வெகு சீக்கிரம் ஏமாந்துவிடுகின்றனர். இதற்கு உதாரணம் வேறு வேண்டியதில்லை. தஞ்சை ஜில்லாபோர்டை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே என்னசெய்தார்கள். பார்ப்பனரல்லாதார்சண்டை போட்டுக்கொண்டு பார்ப்பனரிடம் தலைமைப் பதவியை ஒப்படைத்தார்கள். இப்பொழுது அந்தப் பார்ப்பனர் என்ன செய்கின்றார். ஜில்லா போர்டையே பார்ப்பன மயமாக்கிக்கொண்டு வருகிறார். இவருடைய செய்கைகளுக்குஉதாரணங்கள் பல உண்டு, ஒன்றை மாத்திரம் பாருங்கள், திருவையாற்றில் ஒரு சமஸ்கிருத காலேஜ் இருக்கிறது. அதற்கு இப்பொழுது "ராஜாஸ் ஓரியண்டல் காலேஜ்" என்று பெயர். அதன் பிரின்ஸ்பாலாக இருந்தவர் சமீபத்தில் ரிட்டையர் ஆனார். உடனே அவர் ஸ்தானத்தில், சுப்பிரமணிய சாஸ்திரி என்னும் ஒரு பிராமணரே 250 ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்பட்டார்.

இனி அண்ணாமலை யூனிவர்சிட்டியை எடுத்துக்கொள்ளுங்கள்! அங்கே யார்? எல்லாம், பூணூல் மயமே யல்லவா? தமிழ் நாட்டு யூனிவர்சிட்டி என்று பெயர். ஆனால் தமிழருக்கு இடமில்லை. தமிழுக்கு மதிப்பில்லை. இதற்குக் காரணம் என்ன? பார்ப்பன மயம் என்பதா? அல்லவா?

ஆகையால் பார்ப்பனர்கள் செய்வது சட்ட மறுப்பாயிருந்தாலும், சமூக ஊழியமாயிருந்தாலும், மதப் பிரசாரமாயிருந்தாலும், உத்தியோகமாயிருந்தாலும், அவைகளெல்லாம் பார்ப்பனரல்லாதாரை நசுக்கக்கூடியவைகளே என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். புத்தி உள்ளவர்கள் கேளுங்கள், அறிவுள்ளவர்கள் யோசித்துப்பாருங்கள், வந்தனம். பிறகு சந்திக்கிறேன்.

தலைப்பு மனைத்தால்
தான் ஜாதி ஒழியும்,

(6ம் பக்கத்தொடர்ச்சி)

விடுகின்றார்கள். பெண் கல்விக்கு மாறுபட்ட அபிப்பிராயம் இந்நாட்டில் அதிகமில்லையென்றே கூறலாம். இலங்கையில் கல்வி அபிவிருத்திக்கு பெரும்பாலும்கிருஸ்தவர்களேகாரணம்என்றுகூறலாம்,கிறிஸ்தவகலாசாலைகள் பல இருக்கின்றன. "இரட்சண்ய சேனை" கிறிஸ்தவக் கூட்டத்தின் ஆர்ப்பாட்டம் இங்கு அதிகம். பெண் கல்லூரிகளில் இந்தியாவைப் போன்று உத்தியோகக் கல்வி கற்பிக்கப்படுகிறதே தவிர,பெண்கள் இல்லறத்தை செம்மையாக நடத்தத் தக்க கல்வி போதிக்கப் படுவதாகக் காணேம். ஆண் பிள்ளைகள் கல்வி பயிலும் பல கல்லூரிகளில் பெண் மக்கள் பலர் ஆசிரியராயமைந்திருக்கின்றனர்.

பத்திரிகைகள்.

இங்கு ஜனத் தொகை மிகச் சுருக்கமாயிருப்பினும்மக்களின் கல்விஅபிவிருத்தியால் பத்திரிகை அதிகமாகத் தோன்றி வருகின்றன. சிலோன் டெய்லி நியூஸ், மார்ணிங் லீடர், அப்ஸெர்வர், இண்டிபெண்டன்ட், டைம்ஸ் ஆப் சிலோன், முதலிய ஆங்கில தினசரிகளும், சிலுமினு, டினமினு, முதலிய சிங்கள தினசரிகளும் வீரகேசரி என்னும் தமிழ் பத்திரிகையும் வெளியாகிவருகிறது. சமீபத்தில் "தினவர்த்தமானி"என்றதமிழ் தினசரியும் வெளியாகப் போகிறதாய்வதந்தி மலையாளம் டெயிலி நியூஸ், மலையாளி, மலேகரா முதலிய மலையாளதினசரிகளும் இன்னும் கணக்கற்ற வாரப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் வெளிவருவதுடன் மேனாட்டில் வெளியிடப்படும் பல பத்திரிகைகளும் இங்கு விற்கப்படுகிறது. இங்குள்ள தமிழர்கள் தமிழ்நாடு, குடியரசு, புதுவை முரசு; தமிழன், இந்தியா முதலியவைகளை விசேஷமாய் படித்து வருகின்றார்கள். குடி அரசைப் பரப்ப ஆங்குள்ள சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் விசேஷ முயற்சி எடுத்து வருகின்றார்கள். விசேஷமான அபிவிருத்தியுமடைந்து வருகின்றது. இதற்கு தோழர்களான ஈ. வெ. இராமசாமி, இராமநாதன் முதலியவர்களின் விஜயமே பெரிதும்காரணமாய் மிளிர்கின்றன. இங்கு வெளியிடப்படும் வீரகேசரி என்னும் தமிழ் வெளியீடு தோழர் சுப்பிரமணியஞ் செட்டியார் எனும் ஒருவரால் வெளியிடப் பட்டது. அவர் சமூக சீர்திருத்த விருப்பம் கொண்டவர்என்பதாயும், பத்திரிகை ஆரம்பகாலத்தில் அக்கொள்கைகள் பெரிதும் காணக்கிடந்தது என்றும் எம் நண்பர் மூலமாயும் அறிந்தேன். பின்னர் அப்பத்திரிகைக்கு ஆசிரியராய் பார்ப்பனர்கள் நுழைந்தும் சமூக சீர்திருத்தத்தைப் புறக்கணித்து தேசியப் பத்திரிகை போல் நடித்து வருகிறது. அதைப் பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப்படவில்லை என்றாலும் தம் கொள்கைக்கு விரோதமாய் நடைபெறும் எந்த இயக்கத்தைப் பற்றியும் தம் பத்திரிகையில வெளியிடுவதில்லை யென்று ஒரு தீர்மானஞ் செய்து கொண்டிருப்பதாயும் யான் இலங்கை சென்றதும் அறிந்தேன். பல அன்பர்களிடத்திலும் அதைபற்றிவிசாரித்தேன் சுயமரியாதை இயக்கசம்மந்தாயும், ஆதிதிராவிடர்கள் சங்கவிஷயமாயும் சிறிதும் அப்பத்திரிகை பிரசுரிப்பதில்லை யென்றும் அதுவிஷயமாய் பலஅன்பர்கள் கடிதம் எழுதியும் வீரகேசரி ஆசிரியர் எவ்விதப்பதிலும் எழுதினரில்லை யென்றுமறிந்தேன். இதுபற்றிய விஷயங்கள் சுயமரியாதைத்தொண்டர்களும் இதர சமூக சீர்திருத்த தொண்டர்களும் அறிந்து வேறு ஒரு தமிழ் தினசரி தோன்றச் செய்யவேண்டுமென்று முனைந்து வேலைசெய்வதோடு வீரகேசரியைப் பகிஷ்காரஞ்செய்யவும் வேண்டும்முயற்சியும் யெடுத்து வந்தனர். இதனிடையே இலங்கையில் செல்வாக்குள் ளஆங்கிலதினசரியாகியடெயிலி நியூஸ், அப்ஸெர்வர் பத்திரிகைகளையும் தினமினுஎன்றும் சிங்களதினசரியையும் வெளியிடும் ஒருகம்பெனியார் "தினவர்த்தமானி" என்னும் தமிழ் தினசரிவெளியிடப் போவதால்அதைஆதரிக்கவேண்டு மென்று முடிவு செய்திருந்தனர், இதனிடையே இலங்கை இந்தியர் சுயமரியாதைச் சங்கத்தின் பதினேராவது மாதாந்த கூட்டத்தில் வீரகேசரி ஆசிரியர்தோழர் பி. பி. ஆர். சுப்பிரமணியன் செட்டியார் தலைமை வகிக்கப் போவதாக அழைப்பிதழ் ஒன்றும் எனக்கு வந்தது. எனவே இனியாவது வீரகேசரி ஆசிரியர் தம் கடமையை உணர்ந்து நடப்பாரென நம்புகிறேன்.

பெண்மணிகள்.

சிங்களப் பெண்மணிகளே இந்நாட்டில் விசேஷித்தவர்களாய்த் தோன்றுகின்றார்கள்.சுயமரியாதைக் கொள்கையின்னதென்பதைஇவர்கள்அறியாவிடினும் இவர்களிடத்தில் சுயமரியாதைக் கொள்கைகள் பூரணமாய்க் குடிகொண்டிருக்கின்றது என்று கூறலாம். தமிழ்நாட்டுப் பெண்களைப்போல் உடையணிவார்களானால் எவரும் அவர்களைத் தமிழ்ப் பெண்ணென்றே மொழிவர். பெண்கள் செவ்விய நிறமும் நீண்டு அடர்ந்த கருத்தகூந்தலும், நல்ல தேகக் கட்டும் உடையவர்களாயிருக்கின்றார்கள. அதிகக் குள்ளமாகவோ, நெட்டையாகவோ இராது சமமான வளர்த்தியையுடையவர்கள். அவர்கள் நடையுடைபாவனை முதலியவைகளில் ஆண்மை பொலிந்து விளங்கும். அவர்களின்கம்பீரமான பார்வையும், பிடி நடையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்தன்மையன. சிங்கள ஆண்களைப் பார்க்கிலும் பெண்கள் அதிகமாய் வியாபாரத் துறையிலும் ஏனைய தொழிலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஓ! சிங்களப் பெண்மணியே இப்பொழுது சட்ட சபை உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் பெரும்பாலான பெண்மணிகள் கல்வியிலும் தையல் வேலையிலும் விசேஷமுற்போக்கடைந்திருக்கிறார்கள். இவர்கள் அரையில் சுமார் நாலுமுள நீளத்தில் இரு பக்கங்களும் மூட்டப்பட்ட கைலியும் மேலே ஒரு சிறிய ரவிக்கையுமே பெரும்பாலோர் அணிந்திருக்கின்றார்கள். சிலர் ரவிக்கை மேலே ஓர் சிறிய துண்டால் போத்தியிருக்கின்றார்கள், சில கல்வி கற்ற பெண்கள் ஐரோப்பியப் பெண்கள் போன்று கவுனும் சில பெண்கள் இந்தியப் பெண்கள் போன்று சேலை அணிந்திருந்தாலும் சுமார் 8-முழ நீளமுள்ளதாகவே இருக்கிறது. பெண்கள் விசேஷமாய் நகை அணிவது கிடையாது. பெண்களுக்குச் சொத்துரிமை, விவாகரத்து, விதவை மணம் முதலிய உரிமைகளிருக்கிறது. இளமை மணஞ் செய்யும் வழக்கம் கிடையாது. தாலி கட்டும் வழக்கம் இவர்களுக்குள் அறவே கிடையாது. ஆண்களிலும் பெண்களே அதிக மத பக்தி யுடையவர்கள் தோன்றுகின்றார்கள். புத்த மதக் கோவில்களிலும் விழாக்களிலும் பெரும்பாலும் பெண்களே விசேஷமாகக் கலந்து கொள்ளுகின்றார்கள். புருஷர்கள் பெண்களுக்கு விசேஷ மரியாதை காட்டுவதோடு சிறிது அச்சமும் கொள்கிறார்கள். சமயம் வாய்ப்பின் ஆண்மக்களுடன் போரிட அவர்கள் (பெண்கள்) அஞ்சுவதே கிடையாது. பெண்கள் கல்வி கற்கக் கூடாதென்று சட்டமின்மையால் பெரும்பாலோர் தாய்ப் பாஷையிலும் சிலர் ஆங்கிலக் கல்வியும் கற்றிருக்கிறார்கள். பெண்களுக்கு விசேஷமான சங்கங்களும் கிளப்களும் இருக்கிறது- நாட்டுப் புறத்தில் பெண்மக்கள் இவ்வளவு நாகரீகமுடையவர்களாயில்லை. அங்கு நமது நாட்டுத் தாழ்த்தப்பட்ட பெண்மணிகள் போன்ற சில ஜாதியார்கள் காணப்படுகின்றார்கள். அவர்கள் நடையுடை பாவனை நிறம் முதலியவற்றில் இந்நாட்டுத் தாழ்த்தப்பட்ட மக்கள் போன்றே இருக்கின்றார்கள். என்றாலும் நமது நாட்டைப்போன்று பிற ஜாதியார்களால் அவர்களுக்கு எவ்விதத் துன்பமும் உண்டாக்கப்படுவதாய்க் காணேம். இங்குள்ள முஸ்லீம் பெண்களும் இந்திய நாட்டு முஸ்லீம் பெண்களைவிட அதிக முன்னேற்றமடைந்திருக்கின்றார்கள். சோனக முஸ்லீம் பெண்கள் உடை, நடை, நகை கல்வி முதலியவைகளில் நாகரீகம் பெற்று வருகிறார்கள். என்றாலும் வெளியிற் செல்லும்பொழுது ஒரு வெள்ளைப் போர்வையைப் போத்திக்கொண்டு தாராளமாய்க் எங்குஞ் சென்று வருகின்றார்கள். ஆனால் முஸ்லீம் பெண்களில் மலேயா முஸ்லீம் பெண்கள் விசேஷ முன்னேற்ற மடைந்திருக்கின்றார்கள. பலர் ஆங்கிலக் கல்வி கற்று கவுன் அணிந்திருக்கின்றார்கள். பலர் பார்சி உடை அணிந்திருக்கின்றார்கள். அவர்கள் தாராளமாய்க் கடற்கரைக்கும் வேறு இடங்களுக்கும் செல்ல பூரண உரிமை பெற்றிருக்கின்றாகள். ஆண் கள் பெண் மக்களையும் நீங்கள் என்று மரியாதையாகவேபேசுகின்றார்கள். பெண்களுக்கு அவர்கள் உரிமைகளையெல்லாம் வழங்கும் தாராளமான மனத்தை மலேய முஸ்லீம் ஆண்கள் பெற்றுள்ளார்கள்.

———

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

———

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta,

———

கவலை வேண்டாம்!

தற்காலத்தில் ஒவ்வொரு வரும் சுலபமாக சம்பாதிக்கக்கூடிய வழியை தெரிந்து கொள்ளவேண்டாமா? அட்டிசொலுல் ஒரு ரிப்ளேகார்டு எழுதுங்கள். பதில் தெரிந்து கொள்ளலாம்.

S. நாராயணசாமி

வடக்குவீதி திருவாரூர் S. I.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்: —

சுவாமி சிவதேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

[5-ம்பக்கத்தொடர்ச்சி]

ரமாகக்கொண்டிருக்கும் நமக்கு ஜன நாயகத்துவம் விளங்குமா? வருமா? நமது தனித்தனி கடவுளுக்குத்தான் அதைப்பற்றித்தெரியுமா?

ஒவ்வொரு சமயத்திலும் கடவுளிருக்கிறார், அவரவர்கள் தேசத்தை அவரவர்கள் ஆளுவதற்கு அவரவர் கடவுள்கள் ஆசீர்வதிக்கின்றன. நம தகடவுள் நமக்கு அவ்விதம் செய்ய வில்லை. நமதுதேசத்தில் நம்மை அடி மையாக்கிஇருக்கிறது. நமது கடவுளி டம்நியாயமும்,நன்றியு மிருக்குமேயா னால்நமது நிலமை மற்றதேசத் தாரைப்போல விருக்கவேண்டாமா? கடவுள் குற்றாலால் குற்றமுள்ள கடவுளை விட்டு நீங்குவோம் நம்குற் றமாலல் அக்குற்றத்தைவிட்டுவில குவோம்

நமது கடவுள் நமது முன்னோர் களிடம் வந்து நேரிலும் ஆகாசவெளி யிலும் பேசிப் போனதாக இதிகா புராணங்களில் சொல்லப்படுகிறது இப்பொழுதும் பல்ருக்குச்சொப்ப னம்சாதித்து வருவதாகச் சொல்லுகி ரூர்கள். அறுத்துச்சமைத்த கோழி உயிர்பெற்று பழனிமலை உச்சியில் கூவுகிறதாகவும், சமைத்தமீன்உயிர் பெற்று துள்ளிச் சரவணப்பொய் கையில் குதிபபதாகவும், வருஷத்தி ற்கொருதரம் திருப்பதி மலையில் திருப்பதிப் பெருமாள் பார்ப்பாரப் பையனாக வருவதாகவும், மகுந்துவி டம்பக்கடையாடுவதும், தீர்த்தக்காவ டி, பால் காவடி, உண்டிகை பிரார்த் தனைமுதலிய வைகள் கொண்டுவரச் சொற்பனம் சாதிப்பதாகவும் சொல் லுவதுமல்லாமல் ஒவ்வொரு கோ வில்களிலும் ஒவ்வொருமூர்த்தமாக எழுந்தருளி காட்சிகொடுத்து வருவ தாகவும் சொல்லுகிறார்கள். அதுவு மல்லாமல் அடுத்தவருடம் மாசிமகத் தில் கும்பகோணம் மாமாங்கக்குளத் திற்கு கைலாசத்திலிருந்துகங்கையை வரும்படியாகவும்உத்தாவுசெய்திருக் கிறார்.மாமாங்கக்குளத்திலுள்ளஆனைக் கால் பூச்சி, சொரி, சிரங்கு, மேகம், புண், வாந்திபேதி வயிற்றுக்கடுப்பு, முதலிய பூச்சிகள் புனிதமானகங்கா ஜலத்தில் சாவதில்லை. அந்தப்பூச்சி கள் பக்த கோடிகளைப் பற்றிக்கொ ண்டு எமலோகத்திற்கு அனுப்புவது மல்லாமல்பக்தர்கள் மூலமாகஊரெல் லாம் அவ்வியாதிகள் பரப்பவும்படுகி ன்றன. இப்பூச்சிகள் கோவில்களிலு ள்ளபிர்மா விஷ்ணு, சிவன், லெட்சு மி, சரஸ்வதி, பார்வதி முதலிய தெய் தங்களிலும், பால்பாய்சம், பஞ்சாமி ர்தம் முதலிய பிரசாதங்களிலும் எந் தப்புரோகித அர்ச்சனை மந்திரங்களி லும் சாவதுமில்லை. அதனல் அதை உணர்ந்த முனிசிப்பாலிட்டி ஆல்பத் திரிமருந்தைப் போட்டு அப்பூச்சிக ளைக்கொல்லவும் வேண்டியிருக்கி றது ஆனதால் நமது தீர்த்தம் பிர சாதம் வழிபாடுகளைவிட அறிவே வேண்டியிருக்கிறது.

மேற்சொன்ன சக்திகளையெல்லா முடையநமது கடவுள் நமதுவிதிக் குக்கர்த்தாவான ஆங்கிலேய ஏகாதி பத்திய அரசாக்ஷியை ஆளுகிறவர்கள் ஏழெட்டு மந்திரிகள் தானே? அவர் களிடம் நமது குறைபாடுகளைப்பற்றி நமது கடவுள் ஒருசொர்ப்பனம் சாதி த்துவிட்டால் நமது குறைபாடுகள் வெகுவாய்த்தீர்ந்துவிடாதா? இத் தனை கமிட்டியும்வேண்டியதில்லை.யா ரும்அடிபடவும், ஜெயிலுக்கும்போக வும் வேண்டாம். வீண்சிலவுமில்லை நமதுபிரதிநிதிகள்பீச்சுரோட்டில்அலை ந்துதிரியவும் வேண்டாம்

உலகசக்தியை நம் அறிவால் கண் டுசெய்கையில் பயன்படுத்தலாம்.எத் தனைக்கெத்தனை அந்த விதியைசுவா கரிக்கிறோமோ அத்தனைக்கத்தனை நமதுபாதையிலுள்ள தடைகள்வில கும், இந்தவிதியின் ஞானத்தால்லய ன்ஸ்என்னும் இயற்கை நூல்வலியால் பூமியில் விஷக்கிருமிகளை இல்லாமல் செய்து விடுவேன், கல்விப்பஞ்ச மும் சோற்றுப்பஞ்சமும் இல்லாமல் செய்து விடுவேன், ராஜ்ஜியத்தின் பொதுநன்மைக்கும், தனிமனிதனு டைய ஸ்வதந்திரத்திற்கும் முரண்ப டாமல் செய்வேன் என்று துணிவு டன்கூறும் ஆங்கிலேய சாஸ்திரஞா னத்தை அரசாக்ஷிசெய்யும் மந்திரிக ளிடம், தண்ணியில், பள்ளியில், படிப்பில், வாத்தியாரில் பையனில், வீட்டில், வாசலில், கோவிலில், சுவா மியில், கச்சேரியில் கலியாணத்தில், கருமாந்திரத்தில், பிரவியில் தீட்டு. அவன்தொட்டால் தீட்டு. இவன் தொட்டால் பரிசுத்தம், என்னும்சா ஸ்திர ஞானத்தை அரசாக்ஷிசெய்யும் நமது கடவுளுக்குச் சொர்ப்பனம்சா திக்கயோக்கிதைதானுண்டா?

மனதிலும், இருதயத்திலும்,உயிரி லும் உண்மையான மனிதத்தன்மை யில்லாதவர்களையும் நமது காட்டை இவ்வளவு உச்சஸ்தானத்திற்குக்கொ ண்டுவந்தவர்கள் நாங்களே யென்று அதிகாரவெறியினல் நமதுநாட்டை த்துச்சமாக நினைப்பவர்களையும், தன் னலக்குருட்டுத் தனங்களின் மோக ங்களில்லாமல் நமது நாட்டைவிலா வாட்சியுடன் காண்கிறவர்களையும் ஆங்கிலேய ஜாதியென்றல் நியாயப் பெயர்கொண்டது முயற்சியும் தரும மகிமையுமே நமது ஜாதிக்கு உயர் வையுண்டாக்கிற்று என்றுநினைத்து நியாயம் உண்மை விடுதலை என்ற வார்சங்களை யதார்த்தமாக நம்புகிற வர்களையும்உடைய ஜனங்களையும்பல நூற்றாண்டுகள் வருந்தி சித்திபெற்று விடுதலையின் கொடியைத்தூக்கி, கொ ள்கையில் விடுதலை, யோசனையில் விடுதலை, ஆதர்சங்களிலும் விடுத லைஉடைய தேசங்களையும் அரசா க்ஷிசெய்யும் ஆங்கிலேய மந்திரிகளி டம், பலவிதக்கள்ளைக்குடித்து, பல விதமாம்சந்தைத்தின்று, பலவித விபசாரம்செய்து பலவிதபொய்சொ ல்லி, பலபேர்சொத்தை மோசம்செ ய்து வாழ்ந்தாலும் உயர்ந்த ஜாதி உயர்ந்த ஜாதிதான். சட்டம்படித்து த்தேர்ந்ததாலும் சாஸ்திரம் படித்துச் சாமியாரானலும், வேதம் படித்துஅடிக ளானலும், சபையில் பேசிச் சட்டச பையில் ஸ்தானம் வகித்தாலும், கள் குடிக்காமல், கறிதின்னுமல் பொய் யும் புரட்டால் அன்னியர் சொத் தை அபகரிக்காமல் வாழ்ந்தாலும் தாழ்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி தான் என்பதை அரசாக்ஷி செய்யும் நமது கடவுள் சொர்ப்பனம் சாதிக்க வெட் கப்படுகிறதே.

ஆனதால் நாமெல்லாம் சேர்ந்து நமது கடவுளைப் பொதுக்கடவுளாக குவோம். பொதுக் கடவுளுக்குத் தான் ஜனநாயகத்துவம் விளங்கும் நமக்கும் உபயோகப்படும் புளியோத ரையும் பொங்கலும் தின்றுகொழுத் துநம் குறையைத் தீர்க்காதகடவுளை யெல்லாம் விட்டு உலகப்பொதுவிதி க்கு ஒத்த பொது கடவுளை எல்லா ரும்கடைப்பிடியுங்களென்றேசுயமரி யாதை இயக்கம்சொல்லுகிறது. உள் ளம்கடந்து நிற்பது கடவுள். உள்ளம் கடந்து நிற்பது சிந்தனைசக்தியின் அறிவேயாகும். அந்த அறிவை எல் லாரும் தெரிந்துகொண்டால் பார்ப் பானின் ஏமாத்துப் பலிக்காதென்று அதையாரும் படிக்கக்கூடாது என் று செல்வாக்குடைய மடையர்களைக் கொண்டு சித்தாந்தப் படுத்திவிட் டார்கள். அண்ணுமலைப்பள்ளியும் அதற்களாயிருக்கிறது.

———

பொருள் செய்வகையும்
அனுபந்தமும்

விலை ரூபாய் ஒன்று

வியாபார சம்மந்தமான பல ரகசி யங்களை உடையது வியாபாரத்தில் அனுபவம் இல்லாதவர்கள்கூட ஷை புஸ்தகத்தின் ஆதரவைக்கொண்டு அதிக பணம் சம்பாதிக்கலாம். ஷை அனுபந்தத்தில் புக்கிப்பிங் ஒற்றை பதிவு (Single entry) இரட்டை பதிவு Double entry) என்னும் இரண்டு பாகங்களும் அடங்கியிருக் கின்றன. வியாபாரிகளுக்கும் கம் பெனி உத்தியோகஸ்தர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் மிகவும் பிரயோ ஜனமானது.

பு. கோபால் கெட்டியார்,
123 ஈஸ்வரன் தர்ம ராஜா
கோவில் வீதி, புதுச்சேரி.

மலையாளம் சில்க்.

2½ வீதி 5-ரூபாம்பட்டு 1க்கு ரூ. 1-8-0
ஷேகம்பிக்கரை டஜன் 1க்கு ரூ. 15.
3-வீதி8-ரூபா வேஷ்டி 1க்குரூ. 3-8-0
S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார் திருவிதாங்கூர்.

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1880ம் வரை வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார் B A B L
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

கோஷாயி ராஜ இரண குடோரிதைலம்.

இத்தைலத்தை வெட்டு காயங்கள், (தீ) நெருப்புபட்ட இரணங்கள், வெண்ணீர் நிராவகங்கள் பட்ட இடங்களிலும் லை, கால், மர்மஸ்தான புத்து, இரணங்களிலும் சகல அருப்பு பண்டகளிலும், படர் தாமரை, சேற்றுப்புண், கண்ணைப்புத்து, கண்டமாலை, குழிப்புண்; புரையோடிய இரணங்கள், ஆராத மேக இரணங்களிலும் உபயோகித்து வர, உண்மம் நிர்க்குணம் தொண்டூற்றி வரும். தோழனைப் போல் உபயோகித்து வரும். அன் பர் களின் உபாதைகளை (எரிச்சலற்று,) ஆச்சரியப்படும்படியாக நீக்கி காக்கவல்ல, கோஷாயி, ராஜ இரணகுடோரி தைலம் ½ அவுன்ஸ் சீசா 1-க்கு ரூ. 1—0—0. ஒரு அவுன்ஸ் சீசா 1-க்கு ரூ. 1—12—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

உதவி டாக்டர்,
T. K. V. Chalam

டாக்டர் B. A. எதிராஜ்.
(காலரா பைரி)
கோஷாயி லைவ்தியசாலை,
தென்னூர், திருச்சி.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

மாகவும் கைகால் குடைச்சல் மேலில் தழும்பு முதல் இருந்தது. தங்கள் (கெய்ரோடைன்) சாப்பிட்டதில் உடம்புசுகரியமாகவும்பசி அதிகமாகவும் கைகால் குடைச்சலில்லாமலும் உடம்புநன்றாய் இருக்கிறது. ஆனபடியால் அந்த கெய்ரோடைனை நாங்கள்நிரம்பவும்மெச்சிக்கொண்டோம். இன்னும் சிலமருந்துகளும் தங்களிடத்தில் இரண்டு மூன்று நினங்களுக்குள்ளாக வரவழைத்துக்கொள்ளுகிறேன்.

20-2-31 (Sd) சி. நடராஜத்தேவர், பள்ளிவிடை,
கெங்கை கொண்டான்புறம், திருச்சினாப்பள்ளி.

நிரம்பக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த வயிற்றுவலி குணமாய்விட்டது

பரங்கிப்பேட்டை.

தங்கள் அனுப்பிய (கெய்ரோடைன்) மருந்து தின்றதில் குணம் என்னவென்றால், கொஞ்சநாளாய் வயிற்றில் வலியாயிருந்து நிரம்பக்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளைக்குக் கொடுத்தேன். குணமாய்விட்டது.

(Sd) T. M. KAWOGEMIAH,
13—2—31. Portonovo

ஏனக்கு உண்டான சரீரஆரோக்கியத்திற்கு அளவேயில்லை

வாயினாலும் சொல்லமுடியாது.

சைதாப்பேட்டை—மதராஸ்.

நான் சிலநாளைக்கு முன் தங்கள் உலகப்பிரசித்திபெற்ற கெய்ரோடைன் என்னும் மருந்தைவாங்கிச் சாப்பிட்டேன், பிறகுஎனக்கு உண்டான சரீர ஆரோக்கியத்திற்கு அளவே கிடையாது. என்வாயினாலும் சொல்லமுடியாது. தங்களை ஒருமுறைநேரில் வந்துகாணும் படியாக மிகவும் ஆசையுள்ளவனாய் இருக்கிறேன். தயவுகூர்ந்து எனக்கு கீழ்காணும் விலாசத்திற்கு ஒருபுட்டி கெய்ரோடைன் மருந்தும்ஒருபுட்டி சித்தர் சஞ்சீவி மாத்திரையையும் வி. பி. மூலியமாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

15-2-31 (Sd) A M. ஆரோக்கியசாமிபிள்ளை,
கவர்ன்மெண்ட் பாரம், சைதாப்பேட்டை, மதராஸ்.

பூராவும் சௌக்கியமாகிவிட்டது. தேகம் நல்லமேனியும் உண்டாகி விட்டது.

கோலார்—பங்களூர்.

தாங்கள் முன் அனுப்பிய கெய்ரோடைன் மருந்தைச் சாப்பிட்டேன். என் தேகத்தில் சொரி மாதிரியாய் தடிப்புள்ள சிரங்கு மூலச்சூடு, அடிவயிற்றில் வலி இவைகள் யாவும் பூராவும் சுகமாகிவிட்டன. தேகம் நல்ல மேனியும் உண்டாகி விட்டது. இதற்காகத் தங்களுக்கு என் வந்தனதைச் செலுத்துகிறேன். எனக்கு இன்னும் சித்தர் சந்தனாதித் தைலம் ஆறு அவுன்ஸ் புட்டி ஒன்றும் சித்தர் சஞ்சீவி மாத்திரை புட்டி ஒன்றும் அனுப்பிவைக்க வேண்டியது.

21—2—31. (Sd) T. தைலுபிள்ளை,
கோல்மேஸ்திரி (சாம்பியன் ரீப்) கோலார், பெங்களூர்.

பித்தமயக்கம் வயிறு ஏரிச்சல் குணம்.

ஜெயங்கொண்டான்—திருச்சி.

தங்களிடத்தில் கெய்ரோடைன், சித்தர் சஞ்சீவி மாத்திரையும், பல்பொடியும் வரவழைத்து சாப்பிட்டதில் பல்பொடியை பல்விளக்கினதில் பல்லில் அழுக்கில்லாமல் சுத்தமாயும் வாய்நாற்றம் இல்லாமல்போய்விட்டது. சித்தர் சஞ்சீவி மாத்திரை பேதிக்குசாப்பிட்டதில் 5, 6 தரம் சௌகரியமாய் பேதியாக வாயுவுசௌகரியமாயிருக்கிறது. கெய்ரோடையன் மருந்து சாப்பிட்டதில் பித்தமயக்கம், வயிறுஎரிச்சல், திரேகத்தில் வலி இதுசௌக்கியம். பசிஇல்லாதிருந்து இப்பொழுது பசியெடுத்து சௌகரியமாய் வேளைதவறாமல்சாப்பிட்டு வருகிறேன். மாட்டிற்கு சீக்குகண்டதற்கு இரண்டுமாடுகளுக்கு சித்தர்சஞ்சீவி மாத்திரைகளைக் கொடுத்ததில் சீக்குசௌகரியமாய் விட்டது.

(Sd) A. கந்தசாமிஐயர்,
26—2—31. ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
புதுக்குடி, ஜெயங்கொண்டான் P. O. (Trichy Dt.)

பத்துவருஷ மலச்சிக்கல் குணம். நல்லபோ.

வண்டிப்பெரியார்—(மதுரைஜில்லா.)

நான் தங்களின் அருமை பெருமையான சித்தர்சஞ்சீவிமாத்திரை சாப்பிட்டபின் தங்கள்கெய்ரோடைன் என்றமருந்தை சாப்பிட்டு வந்ததில் எனக்கு உத்தேசம் பத்துவருஷகாலமாயிருந்த பேதிகட்டு (மலச்சிக்கல்) நீங்கிஅதினால் ட்ண்டான அநேகவியாதிகளும் தீர்ந்து இப்போது நான்நல்ல சுகதேகியாயிருப்பதுடன், என்இஷ்டர்களுக்கும் அந்தமருந்தைக்கொடுத்து அநேகமான குணங்களைப் பெற்றுதங்களுடைய மருந்தினால் நாலும்நல்ல பேரெடுக்கவும்வந்தது. அதனால் நான் தங்களுக்கு அதிகமானதன்றி சொல்லவேதாடு அன்பான வந்தனமளிக்கின்றேன். மேலும்தங்களுடையமருந்தைப் பற்றிஇன்னும் அநேகருக்கு நற்சாக்ஷி கொடுக்கிறேன். R. S. பதி. என்றமருந்தின் குணமோ அதிலும்மேன்மை. விலையும்சகாயம். இப்போது தயவுசெய்து என்விலாசத்திற்கு 80 வேளை கெய்ரோடன்மருந்து புட்டி 1, R. S. பதி மருந்து 1 புட்டியும் வி. பி. யில் அனுப்பக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Sd) பி. எ. ஐசக் றைட்டர், வெஸ்பிடல்ஸ்கோட்டம்,
27-2-31. வண்டிப்பெரியார் P. O. மதுரைஜில்லா.

ஆணவக்குறைவுக்கு ..... சக்தி யுள்ள டானிக்.

மதராஸ்.

(ஆங்கிலக் கடிதத்திற்கு மொழிபெயர்ப்பு.)

நான் எனது எலும்புக்குள் வேதனையுடன் ஒருவகையான நோயால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன், அதனால் இரண்டு மூன்று மாத காலங்களாக பூராவும் படுத்த படுக்கையிலேயே இருந்தேன். டாக்டர்களுடைய மருந்தில் அருவருப்புண்டாகி அவர்கள் வைத்தியத்தை விட்டு விட்டு ..... சும்மா இருந்தேன். இப்படி இருக்கையில் தங்களுடைய மேலான கெய்ரோடைனைப்பற்றி விளம்பரம் தெரியவந்தது. நான் கெய்ரோடைன் ஒரு புட்டி உபயோகித்து அது ஒரு ..... சக்தியுள்ள டானிக் என்று கண்டேன். மிகவும் கேடான நபும்சகத்தையும், ஆணவக்குறைவையும், ஸ்தம்பனக்குறைவையும் குணப்படுத்துவதில் அதிகஜெயம்பெற்றதாயும், சக்திவாய்ந்ததாயுமிருக்கிறது. அது மனிதனை மனிதனுக்கு மேலான மனிதனாக்கி விடுகிறது. புதிய பலத்தையும், ஊக்கத்தையும் விருத்தி செய்கிறது. சதையையும் இரத்தத்தையும் அதிகப்படுத்துகிறது. உடம்பின் இயற்கைத் தொழில்களை எல்லாம் நன்றாக நடத்துகிறது.

(Sd) டி. கே. எ. எம். பி. ராயப்பேட்டை ஸ்டேஷன், மதராஸ்.

நல்லரத்தமும் சதைபுஷ்டியும் உண்டாகி சந்தோஷத்தை அடைகிறேன்.

சீராப்பாளையம்—(தாராபுரம்.)

தங்களிடத்தில் கெய்ரோடைன் மருந்து வாங்கிச் சாப்பிட்டதில் வாய்ப்புண், நெஞ்சுப்புண், குடல்புண், வயிறுறப்புண், நீர்த்தாரைப்புண், வயிற்றுவலி இவைகள் எல்லாம் நாற்பதுநாள் சாப்பிட்டதில் சீக்கு சௌக்கியமாகிவிட்டது. நல்ல இரத்தமும் சதை புஷ்டியும் உண்டாகி சந்தோஷத்தை அடைகிறேன்.

ஆர். எஸ். பதி. மருந்தை கால்ரா, இரத்தபேதி, சீதபேதிஇவைகளுக்குக் கொடுத்தேன் சௌக்கியமாகிவிட்டது. இன்னும் வயிற்றுவலி, ரணம், அடிபட்டவீக்கம், பொறுக்கமுடியாத வலி, ஆறாதரணம், புரை இவையெல்லாம் சௌகரியமாகிவிட்டது. இவையல்லாமல், சூடியம் வாங்கி குன்மக்கட்டி, வயிற்றுவலி, எரிகுன்மம் இவைகளுக்குக்கொடுத்தேன். 7-நாளையில் கட்டியும் வலியும்நின்றுவிட்டது. 20 நாள சாப்பிட பூராவும் சௌக்கியமாகிவிட்டது. ஆகையால் தங்கள் மருந்தினால் ..... எத்தனையோ பக்கம் மருந்து சாப்பிட்டு தீராதசீக்கு தங்கள் மருந்தினால் எங்களுக்கும் இன்னும் மற்ற யாபேர்களுக்கும் சௌக்கியமாகிவிட்டது.

25—2—31. (Sd) அ. முகமதுகனி டாக்டர்
தாராபுரம் தாலூக்கா, கொளத்துப்பாளையம் கிராமம்,
வீராஜிமங்கலம் போஸ்டு, சீராப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா.

ஹிஸ் ஹைநெஸ் திருவாங்கூர் மகாராஜா அவர்கள் பட்டாபிஷேகக் கண்காட்சியிலும் கவர்ன்மெண்ட் மந்திரிகள் தலைமைவகித்த சித்தவைத்திய மகாநாடு கண்காட்சிகளிலும் முதல்நம்பர் தங்கமெடல்களும், மெரிட் சர்ட்டிபிக்கட்டுகளும், பெற்றிருக்கிற உண்மையான ஆறுமுகமுத்திரையுள்ள மருந்துகள்.

மூன்று லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன.

தாதுபுஷ்டிக்கு அதிசயமான டானிக் மருந்து.

கெய்ரோடைன்

பத்தியம் கிடையாது. ரிஜிஸ்டர் செய்தது. ஆறுமுக முத்திரையுள்ளது. கெடுதல் செய்யாது வியாதி இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆண், பெண் யாவரும் யாதொரு பத்தியமும் இல்லாமல் சாப்பிடலாம்.

இந்த ஒரே மருந்தினால் தீரும் வியாதிகள்.

3 நாளில் வயிறு மந்தம், புளித்தேப்பம், அஜீரண வாய்வுகள், மந்தவாய்வுகள் குணமாகும்.
6 ,, இரத்த மூலம், மூலக்குத்தல், வேதனைகள், மூல வாய்வுகள் தீரும். அபான வாய்வுகள் நன்றாய் வெளியாகும்.
7 ,, மலச்சிக்கல், வாய்வுகள் நீக்கி ஏராளமான பசி உண்டாகும். பித்தவாய்வு நீங்கும். அதிக உணவு செல்லும்.
9 ,, வயிற்றுவலி, வாந்தி, பித்தம், மயக்கம், புளித்தேப்பம், எரிகுன்மம், நெஞ்சுவலி, வாய்வுக்குத்து மார் அடைப்பு தீரும்.
10 ,, இரத்தம் ஊறும், ஊக்கமும் சுறுசுறுப்பும், நாடி நரம்புகளுக்கு வலிமையும், தேக பலமும் தரும்.
15 ,, வீரிய விருத்தியும், ஏராளமான தாது புஷ்டியும் மீறி வரும். சொப்பனஸ்கலிதம் அசதிகள் தீரும்.
20 ,, இருமல், இழுப்பு, நெஞ்சில் கபம், மந்தாரகாசம், சுவாசகாசம், ஈளை காசம், க்ஷயம், சுரம், எலும்புருக்கி தீரும்.
25 ,, வாய்ப்புண், குடல்புண், நெஞ்சுப் புண்கள் ஆறும். கண்ணொரிச்சல் மூலைக்கொதிப்பு குணமாகும்.
30 ,, சூடு, நாள்பட்ட வெள்ளை, தந்திமேகம், முலச்சூடு, தேகக்காங்கை, மஞ்சள் மூத்திரம், உஷ்ணரோய்கள் தீரும்.
31 ,, சூதகவாய்வு, சூதக வயிற்றுவலி, சூதக்கட்டு, கருப்ப வெள்ளை, சூதக ஜன்னி, மலக்கிருமிகள் குணமாகும்.
32 ,, மெலிந்த தேகம் புஷ்டியாகும், உடம்பு நிறை அதிகப்படும், தாது கட்டும், இரத்தம் ஏராளமாக விருத்தியாகும்.
33 ,, தேகக்குளிர்ச்சி, செழிப்பும், முகத்தில் அழகும், வசீகரமும் உண்டாகும். கைநடுக்கம், தேகவெளுப்பு தீரும்.
34 ,, புண்கள், சொரி கரப்பான் வியாதிகள், சிரங்கு, அரிப்புகள், கிரந்தி, மேக நீர், துர்நீர் வியாதிகள் நீங்கும்.
35 ,, மேகநீர், கண்மங்கல், கண் கூச்சம், சிவப்பு, வலிகள், மாலைக்கண், தீபமங்கல் குணமாகும்.
36 ,, குழந்தை பெற்றிருக்கிற தாய்மார்களுக்குப் பாலுண்டாகும். பலம் வரும். குழந்தைகளும் புஷ்டியாய் வளரும்.
37 ,, வயது மூத்த கிழவர்களுக்கு நடக்கவும், களைப்பில்லாமல் வேலை செய்யவும் முடியும். சாப்பாடு நன்றாய்ச் செரிக்கும்.
38 ,, குளிர்சுரம், மலேரியாசுரம், யானைக்கால்சுரம், பிளேக்சுரம், விஷசுரங்களை அடிக்கடி வராமல்நிறுத்திவிடும்.
39 ,, நெடுநாளாக சமையாத பெண்கள் சாப்பிட்டால், இரத்த புஷ்டியுண்டாகி பருவமடைவார்கள்.
,, ,, மந்தாரகாசம், சுவாசகாசம், காக்கைவலிப்பு, மூர்ச்சை மயக்கம், வாதங்கள், ஜன்னிகளை வராமல் தடுத்துவிடும்.
40 ,, உடம்புமெலிந்து போவதினால் உண்டாகும் எலும்புருக்கி, க்ஷயரோகம், இருமல் வியாதியை வராமல் தடுக்கும்.

ஒரு மண்டலம் தொடர்ச்சியாகச் சாப்பிட்டால் பலவீனம், மலடுகள், ஆணவக்குறைவுகள் நீங்கும். வாதங்கள், வலிப்புகள், குன்மகட்டிகள், சுரக்கட்டிகள், ஆரம்பக்குஷ்டங்கள், மேகநீர், துர்நீர் வியாதிகள், புண்புரைகள், பற்பலவியாதிகள் சேர்ந்த தொந்த வியாதிகளை எல்லாம் சமப்படுத்தி உடலுக்கு வலிமையும், ஆயுள்பலமும் தரும். இது ஒரு கல்பமருந்து.

பூரணசுகத்திற்கு ஒரேபுட்டி மருந்து போதுமானது 80 வேளைமருந்து புட்டி 1-க்கு விலை ரூ 5—0—0.

எமது "சித்தர் சஞ்சீவி மாத்திரையை" இரண்டு மூன்று நாளைக்குப் பேதிக்குச்சாப்பிட்டு அதன்பிறகு "கெய்ரோடைன்" டானிக் சாப்பிட்டால் சீக்கிரம் குணம் உண்டாகும். சித்தர் சஞ்சீவி மாத்திரை புட்டி 1-க்கு விலை அணா எட்டு. எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு வேறு. கேட்லாக் இலவம். மலாய் நாட்டார்கள் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஹெட் ஆபீஸ் விலாசம்:—

ஆர். எஸ். பதி அன் கோ., (ரிஜிஸ்டர்டு.)

215 மேலமாசி வீதி, மதுரை

தந்தி விலாசம்:— "சித்தர்" மதுரை

கிளை ஆபீஸ்:—

ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோயில் மேலக்கோபுரம் உட்புறம், மதுரை.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம்	...	0—8—0
2.	சிதம்பர ரகசியம்	...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்	...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது)	...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம்	...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட்	...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.)	...	2—0—0
ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம்		...	0—8—0
சுயராஜ்யம் யாருக்கு		...	0—1—0
சாமிதனின் அடிமைகள்		...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புவதை விட மணியார்டர் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு மாதிரி தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலிகள்.

குடி அரசு மாலிகள் தோன்றியது முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் பெரியார் மலர்களை ஒவ்வொரு தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைத்திருக்கிறது.

ஒவ்வொரு வருஷமலில் கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்டு ஒரு வருஷமலில் பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களிடமிருந்து

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:— "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1.00.
வெளிநாடு ,, இந்தியா $ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், சிங்கப்பூர்.

'சண்டமாருதம்'
சுயமரியாதைத் தமிழ் தினப்பத்திரிகை.

அனல் தெறிக்கும் தலையங்கங்கள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
நுகர்ச்சியான குறிப்புகள்
தேனின் இனிய "நிருட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க சலவைகள்
பெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—4—0
தனிப்பிரதி	ரூ.	0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
த்ரமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது சுவாமிக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரை களைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப் பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து தெளிந்த பண்டிதராகலாம். இதன் விலை அணை. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள முரண் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணை. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணை. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைதனின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒரு முறை படித்த நல்ல ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணை. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணை. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணை. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, மனித பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணை. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான...சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணை. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்புத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணை 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கென கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணை 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம. இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணை 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் திருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணை 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித் திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக் கிறது. சென்னை, பண்டிதர் கா. சுப்பிரமணிய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணை 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராக வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியி டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணர லாம்.

இதன் விலை அணை 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆதலால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.